வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி..

முரசு 2 | சென்னை | 13-5-55 | வெள்ளி | ஒலி 7



# குறளோவியம்

—(✱)—

சேரன் வில்லோ புருவம்? வீரன் கணையோ விழிகள்? சிந்தைக்கு விருந்தோ இந்தக் காந்தச் சிலை?—என்றெண்ணத் தோன்றும் இந்த எழுதாத சித்திரப் பெண்—ஏழடுக்கு மாளிகையில் எழில்காட்டும் கண்ணாடியின் எதிரேயும் இல்லை; இயற்கையின் அழகு மலிந்த அந்தி நேரத் தோட்டத்து நடுவிலேயும் இல்லை; அடுக்களையிலே அமர்ந்திருக்கிறாள். ஏன்? கேள்வி குடையத்தான் செய்யும்.

அந்தப் பட்டுக்கிளி பாவை தன் காதலனுக்குப் பிட்டு தயாரிக்கிறாள். உப்பிட்டு வளர்த்த பெற்றோர், அவளை மலருக்கு ஒப்பிட்டு அவனிடம் தந்தார்கள். அவனோ கொப்பிட்டு வளரும் பகை சாய்க்கக் கொடுவாள் ஏந்திச் சென்றான். அவள் கும்பிட்டுக் கேட்டும் அவன் இருந்தானில்லை. நகர்ந்து ஒழிந்தன நாட்கள். அவளோ நெஞ்ச ஏடுகளைத் திருப்புகிறாள். நெடுஞ் சுவற்றிலேயுள்ள கோடுகளை எண்ணுகிறாள். பால் கணக்கு, தயிர்க் கணக்கு காட்டும் கோடல்ல அவை. அவளின் பற்றுக்கோடு, அவளை விட்டுப் பிரிந்திருக்கும் நாட்களின் கணக்கு! கோடுகளைப் பார்த்துப் பெருமூச்செறிகிறாள். இன்றுதான் வருவானோ—இன்பம் தருவானோ இல்லையோ—இன்றிரவும் தொல்லையோ — என ஏங்குகிறாள். தாமரை மொட்டு நிகர் தனம் படைத்த பேரழகி, தான் சுட்டுதரும் பிட்டுண்ண பேரழகன் வரக் காணேனே எனத் துடிக்கிறாள். அது மட்டுமா? அத்தான் தன்னைப் பிரிந்து எத்தனை நாட்களாயின என அறிவிக்கும் அந்தச் சித்திரக் கோடுகளைத் தொட்டுத் தொட்டு, எண்ணி எண்ணி அவள் விரல்களும் தேய்ந்துவிட்டதாகக் கூறுகிறார், குறும்புக்கார வள்ளுவர்—அதற்கு இதோ குறள்:-

"வாளற்றுப் புற்கென்ற கண்ணு
மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்"

வழி பார்த்துப் பார்த்து கண்களும் மங்கின — நாட்கோடுகளை எண்ணி விரல்களும் தேய்ந்துவிட்டன என்பது பொருள்.

— கருணா —

★

# இடையிலே இருபத்தி நாலாயிரம்!

தலையங்கம்




## பஞ்சசீல பிரதாபம்!

பாண்டுங்! பாண்டுங்!! பாண்டுங்!!! — உலகெங்கிலுமுள்ள பத்திரிகைகள் அனைத்தும் இந்த வாரம் இந்த வார்த்தைகளை அதிகமான இடத்திலே உபயோகித்து விட்டன. சில பத்திரிகை அச்சகங்களிலே பா-ண்-டு-ங் என்கிற நான்கு எழுத்துக்களுக்கும் பஞ்சமேற்பட்டு புதிதாகக்கூட அச்சுகளுக்கு ஆர்டர் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாம்.



பாண்டுங் சமாதானப், படையினரின் பாடிவீடாக அமைந்த போதும்கூட அது நேருவின் வெளிநாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தவரை அது அவருக்கு ஒரு சுடுகாடுதான் என்பது உலகப்பனுகிய எனக்கு மட்டும் தான் தெரியும். இதோ, சொல்லிவிடுகிறேன்.

'பஞ்சசீலக் கோள்கை' என்ற பெயரிலே ஐந்து சமாதானத் தத்துவங்களை சில மாதங்களுக்கு முன் நேருவும், கிருஷ்ணமேனனும் சேர்ந்து பெற்றெடுத்திருக்கிறார்கள். 'பஞ்சசீலம் பிரபஞ்சத்தையே வாழ்விக்கப் போகும் உன்னத லட்சியமாகும்!'—என்று இங்குள்ள தேசிய வீரர்களெல்லாம் தோள்தட்டி ஆடினார்கள். தேள்கொட்டிய குழந்தையைப் போல ஆரியப் பத்திரிகைகள் யாவும் உச்சஸ்தாயியில் பஞ்சசிலத்துக்குப் பாராக்குக்கூறின. சூ-என்-லாய் ஆமோதிக்கப் போகிறார்; புல்கானின் 'சரி' சொல்லப்போகிறார்; ஐசன்துரை 'ஆமாம்' போடப்போகிறார்-இனிபோரில்லை;பொல்லாங்கு கிடையாது—என்றெல்லாம் முழக்கினார்கள். கடைசியில் நடந்தது என்ன தெரியுமா?

நேருவின் பஞ்சசீலக் கொள்கையைப் பற்றி ஒரு வார்த்தை கூட 'ஏமென்' நாட்டாருக்குத் தெரியாதாம். கல்கத்தா டம்டம் விமானக் கூடத்தில் ஏமென் அரசுப் பிரதிநிதி அல்-ஹாசன் வந்திறங்கியபோது 'பஞ்சசீலத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'—என்று ஒரு அவசரக்காரப் பத்திரிகை நிருபர் கேட்டாராம். அதற்கு அவர் சிறிது நேரம் யோசித்து, 'என்ன? பஞ்சசீலமா? யார் அவர்?'—என்று ஒரு பலமான கேள்விக் குறியையே கேள்வி கேட்டவரிடம் திருப்பி அனுப்பினாராம்! எப்படியிருக்கிறது, பஞ்சசீலம்-படும் பாடு!' இதற்குத்தான் நேருவின் செல்லப் பிள்ளை கிருஷ்ணமேனனும், செல்வச் சகோதரி விஜயாவும் விளம்பரம் சேகரிக்க வெளிநாடு சென்றிருக்கிறார்கள்! வேடிக்கை! விநோதம்!!

★

## 'ராஜ பார்ட்' மறைந்தார்!

சென்ற மாதம் இதைவிட வேடிக்கையான செய்திகளும், விநோதமான நடவடிக்கைகளும் அரசியல் வட்டாரத்தில் நடந்தேறியிருக்கின்றன!

பிரிட்டிஷ் அரசியலின் கடோர்க்கஜனான சர்ச்சில்அரசியலில் இருந்து விலகிவிட்டார். விலகுவதற்கு முன்னர் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது அவரையறியாமலேயே அவர் கண்கள் நீர்த்தேக்கங்களாக மாறியதாம்!

அங்கெல்லாம் அரசியல் தலைவர்கள் பொதுமக்களிடமிருந்து விடைபெறுவதற்கு கண்ணீர் சிந்துகிறார்கள். இங்கோ அப்படியல்ல; சுடுகாட்டுக்குப் போனாலும் என் பிரேதத்துக்கு மந்திரி மரியாதை கிடைக்க



வேண்டுமென்று விரும்பும் ஆச்சாரியார்கள் அல்லவா இங்கு இருக்கிறார்கள்! அவர் அரசியலிலிருந்து விடைபெறுகிறார் என்றாலே பொதுமக்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

சர்ச்சில் தள்ளாத வயது காரணமாக விலகுகிறார்; இங்கு ஆச்சாரியார்கள் தகாத செயல் காரணமாக விலகவில்லை-விரட்டப்படுகிறார்கள்! இதுதான் அரசியல் தலைவனுக்கும்—தவறிப் போய் அரசியல் தலைவர்களானவர்களுக்கும் உள்ள வித்யாசம்.

சர்ச்சில் போன நூற்றாண்டு மனிதர்! ஏகாதிபத்தியத்தின் எடுபிடியாய், முதலாளித்துவத்தின் முதுகெலும்பாய் வாழ்ந்தவர்! பிரபல லேபர் கட்சிப் பத்திரிகை கூறியதைப் போல, வைரியாக இருக்கிறான் என்பதற்காக அவன் வீரன் என்பதை ஒப்பாமல் இருக்க முடியுமா? அந்த வகையில்தான் சர்ச்சிலும் முற்போக்கு வாதிகளின் கண்ணோட்டத்துக்குக் காட்சி தருகிறார்!

சர்ச்சில் அரசியல் வானிலிருந்து மறைந்துவிட்டார்; அவர் ஆளாக்கிவிட்ட கன்சர்வேட்டிவ் கட்சியும் மறைந்து விடுமோ என்ற அச்சம் கட்சிக்காரர்களைப் பெரிதும் வாட்டுகிறதாம்! காரணம், சர்ச்சிலின் கன்சர்வேட்டிவ் நாடக சபாவில் சர்ச்சில்தான் ராஜபார்ட்! இதர தோழர்களை அவர் திரை தூக்குபவர்களாகத்தான்தயார் செய்து வைத்திருந்தாரேதவிர, வாரிசை உண்டுபண்ணி வைக்கவில்லை. ராஜபார்ட் வீழ்ந்ததும், நாடக சபையையே கலைக்க வேண்டிவருமோ என்கிற கலக்கமும், நடுக்கமும் கன்சர்வேட்டிவ்களை பிடித்திருப்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லைதான்!

★

## முதல் மந்திரிகள்!

"ஆச்சரியம் தருவதற்கு இதோ நாங்களிருக்கிறோம்!"—என்று மார்தட்டிக் காட்டுகிறார்கள்இருவர்! ஒருவர்தான் சர்ச்சிலுக்குப் பின் கட்சியின் தலைவரும், இங்கிலாந்தின் பிரதமருமான ஆந்தோனி ஈடன்! மற்றவர் பாகிஸ்தான் பிரதமர் முகமதலி!

இவர்கள் இருவருமே ஒவ்வொரு வகையில் ஒற்றுமையாகத்தான் இருக்கிறார்கள்! உலகத்திலேயே எடுப்பான உடையணியும் பத்து ராஜ தந்திரிகளுள் ஈடனும் ஒருவராம்! அதோடு விவாகரத்து செய்துகொண்டவர் ஒருவர் இங்கிலாந்தின் பிரதமராக வருவதும் ஈடன் ஒருவர்தானும்!

அதேபோலத்தான் முகமதலியும்! முதன் மந்திரி பதவிகாலத்திலேயே அவர் வீட்டிலே ஒரு குடும்ப விளக்கை வைத்துவிட்டு, கானடா நாட்டு காரிகையொருத்தியை இரண்டாவது மனைவியாகக் கைப்பிடித்திருக்கிறார். முதல் மனைவி பீகம் ஹமீடா கண்ணீரும், கம்பலையுமாய் வீட்டிலே இருக்கிறாராம்! —இதுபோன்ற செயல்களிலே ஈடுபடும் முதல் மந்திரியும் முகமதலியாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்!

ஈடன் விவாகரத்தை இங்கிலாந்து பெரிதுபடுத்தவில்லை.



விவாகரத்து செய்துகொண்டவர் அங்கு பிரதமராய் வந்ததில்லையே தவிர, விவாகரத்து அங்கே சாதாரணமான நிகழ்ச்சிதான்! ஆனால் முகமதலியின் நிலைமை அப்படியல்ல. பீகம் ஹமீடாவின் சார்பாக பாகிஸ்தான் பெண்மணிகள் ஒன்று திரண்டு முகமதலிக்கு மகஜர் அனுப்பியுள்ளார்கள்! தன் செயலுக்குக் கழுவாய் தேடிக் கொள்ளாவிட்டால், பெண்ணினத்தின் கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருக்கும் — என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்களாம்!

★

## தேர்தல் விநோதம்!

ஆமாம்; இங்கிலாந்தில்கூட எல்லாக் கட்சிகளும் தேர்தல் அறிக்கைகள் வெளியிட்டுவிட்டன. மே 6-ந் தேதி பார்லிமெண்ட் கலைக்கப்பட்டு விட்டது. இன்னும் மூன்றே வாரங்களிலே தேர்தல் யாவும் முடிந்து, புதிய மந்திரி சபையும் பதவி ஏற்றுவிடும்!

எவ்வளவு குறுகிய காலத்துக்குள் அங்கு தேர்தல் நடைபெறுகிறது பார்த்தீர்களா? தேர்தல் முடிவுகள் தெரிவது கூட குறுகிய காலத்திற்குள்ளாகத்தான்!

சில தேர்தல் நிலையங்களில், ஓட்டளிப்பு முடிந்த ஒரு சில மணி நேரங்களிலேயே வென்றவர் யார்? தோற்றவர் யார்?—என்கிற விபரம் அறிவிக்கப்பட்டு விடும்!

ஒரு நாள்—அதற்கு மேற்போனால் இரண்டே நாட்கள்—இதற்குள்ளாகவே அகில இங்கிலாந்தின் தேர்தல் முடிவுகள் அனைத்தும் அவனிக்குத் தெரிந்து விடும்!

உங்கள் நாட்டு தேர்தல் விவகாரங்கள்புரியுமா, உங்களுக்கு? ஆந்திராவில் சென்ற தேர்தலின் போது ஓட்டு எண்ணுவதற்கு மட்டும் எட்டு நாட்களாயின!

அங்கே ஒரு நாட்டின் முடிவுகள் தெரிய ஒரே நாளே போதுமானதாக இருக்கிறது!

இங்கே ஒரு சிறிய மாகாணத்தின் ஓட்டுகளை எண்ணுவதற்கே ஒரு வாரத்திற்கு மேல் தேவைப்படுகிறது!

ஏன் இந்த நிலைமை? ஓட்டுகளை எண்ணுவதற்கு இங்கிலாந்திலே இயந்திரங்களையா உபயோகிக்கிறார்கள்? இல்லை; இல்லை! மனிதர்கள்தான் எண்ணுகிறார்கள்!

இங்குமட்டும் ஏன் அந்த ஏற்பாடு நடைபெறுவதில்லை?

சிறிது யோசித்துப் பாருங்கள்! வினைவுக்கேற்ற விடை புரிந்துவிடும்.

இங்கே நாடு முழுதும் தேர்தல் ஒரே நாளில் நடைபெறுவதில்லை. எனவே குமரி முனையில் ஒரு காங்கிரஸ் அபேட்ச

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 13—5—55 வெள்ளி

## இடையிலே - இருபத்தி நாலாயிரம்!

ஜூன் மாத இறுதியிலோ அல்லது ஜூலை முதல் வாரத்திலோ நமது கழகத்தின் மாநில மாநாடு திருச்சியிலே நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக செய்யப்படுகின்றன என்பதைத் தோழர்கள் அறிவார்கள். சென்னையிலே நான்கு நாட்கள் நாம் நடத்திய மாநில மாநாடு திராவிடத்திலே புதிய சரித்திரத் திருப்பத்தை உண்டாக்கியது என்பதை யாரும் மறுக்க இயலாது. இப்போது திருச்சியிலே அணி வகுக்க இருக்கிறோம். திருச்சி—திராவிடத்தின் இருதயம். அந்த மாவட்டத்திலே தியாகத் தழும்பேறிய செயல் வீரர்கள் ஏராளம். அவர்களின் ஒத்துழைப்போடும்-மாநிலத்து தி. மு. கழகத் தோழர்களின் குன்றாத ஆர்வத்தோடும்—நடக்க இருக்கிற அந்த மாநாடு, நமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றி மாளிகைக்கு வெகு சமீபத்திலே நம்மைக் கொண்டு போய்விடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அறப்போர் வீரரும் திருச்சி தீர்மான அம்பில் தர்மலிங்கம் வரவேற்புக் குழுவின் தலைவராக—செயல் மணியென சிறப்பு பெற்ற எம். எஸ். மணியும், மதுரை தந்த நன்முத்தாம் நமது முத்துவும் செயலாளர்களாக—அறிஞர் அண்ணா பொருளாளராக அமைந்துள்ள அந்த மாநாட்டின் ஏற்றம்பற்றி நாம் அதிகம் கூறத் தேவையில்லை. லட்சோப லட்சம் மக்கள் கூடுவர்—லட்சிய கீதம் கேட்பர்—விடுதலை முரசு தட்டுவர்-வீறுகொண்டெழுவர்-தேய்ந்த தாயகத்தை மீட்பர்-திராவிடத் தனியரசு காண்டர்! இனிய எண்ணங்கள் தித்திப்பான நினைவுகள் சுழல் வேறுகின்றன நெஞ்சில்!

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் இவரேதான் என ஆர்ப்பரித்து வாழ்த்தும் ஆயிரமாயிரம் இளம் இதயங்கள்—நமது பொதுச் செயலாளர் தலைவர் பீடத்தில் அமரும்போது! நினைக்கவே நெஞ்சினிக்கிறது அந்தக் காட்சியை! பழம் பெரும் கிழவர்—சேலத்துத் தாத்தா—ஜி. பி. சோமசுந்தரனார் மாநாட்டின் திறப்பாளர். அனுபவங் கலந்த அரசியல் அறிவுரைகள் கேட்கலாம்—அவ்வழி நடக்கலாம்-அறப்போர் தொடுக்கலாம்-நமது அரசை நமதாக்கலாம்-என்ற உறுதி மொழிகளை உதிர்க்கின்றோம் இப்போதே!

அறிஞர் அண்ணாவின் பொன்னுரைகள் அறப்போருக்கான ஆயுதங்களாக அமையும் என்ற துணிவு பூக்கிறது—"துணையுண்டு; துயருறேல்!" என்று போருக்குத் துரத்துகிறது—இப்போதே அந்த எதிர்காலம் கண்ணுக்குத் தெரிகிறது.

எழிலும் வலிவும் மிகுந்த எதிர்காலம்-அந்த நல்ல காலத்தை உருவாக்க நாமெல்லாம் கூட இருக்கிறோம்; திருச்சியிலே!

பொதுத் தேர்தல் வர இருக்கிறது. மாநாடு விரைவிலே நடந்து முடிந்தால்தான் பொதுத் தேர்தலுக்காகப் போடுகிற திட்டங்களை நிறைவேற்றிட, காலம் போதுமானதாயிருக்கும். தேர்தலில் இறங்கப் போகிற காங்கிரஸ், இப்போதே முஸ்தீபுகளில் இறங்கிவிட்டது. நாம் ஈடுபடுகிறோமோ இல்லையோ; அதை மாநில மாநாடு நிர்ணயிக்க இருக்கிறது. நேரடியாக ஈடுபடுவதென்றால், நிறையக் காலம் தேவை. மாநாட்டை உடனடியாகக் கூட்டியாக வேண்டும். ஈடுபடுவது இல்லையென்று ஒதுங்கி நின்றாலுங்கூட, கழக வளர்ச்சிக்கும், விடுதலைப் போருக்குமான வேறு காரியங்களைப் பார்க்க மாநாட்டை விரைவிலே நடத்தி முடிவு எடுத்தாக வேண்டும். தேர்தலில் ஈடுபடுவதால், விடுதலைப் போருக்கு இன்னும் அதிக ஆக்கம் ஏற்படாதா என்கிற ஒலி, அதோ, நம் காதிலே பலமாக விழுகிறது. ஏற்படும்; ஏற்படாது என்று யார் சொன்னது?—ஆனாலும் அதுபற்றி யோசிக்க—முடிவு செய்ய—மாநாடு கூட்டித்தானே தீரவேண்டும்! அதுவும் ஜூன் இறுதிக்குள் கூட்டுவதுதானே நல்லது!

மாநாடு என்றால், நினைத்தவுடனே கூட்டிவிட நாமென்ன ஆவடிக்காரர்களா? சாவடிக்காரர்கள் நிறைந்த கழகம் நம்முடையது! அப்பேற்பட்ட ஆவடிக்காரர்களே ஆலையரசர்களிடம் கைநீட்டிப் பொருள் சேர்த்துங்கூட, மாநாட்டு முகப்புப் பந்தல் வேலையை பூரணமாகச் செய்து முடிக்க இயலவில்லை. காங்கிரசைப் போலவே அந்தப் பந்தலும் மொளியாக அமைந்திருந்ததாம்! நாமோ—ஆலை அரசர்களின் தயவு பெற முடியாதவர்கள். தானே வந்தாலும் தள்ளிவிடும் போக்கு கொண்டவர்கள். தேர்தலிலே காங்கிரசுக்கு எதிராக நின்று போட்டியிட்ட முதலாளிகள்கூட, ஆவடிக்கு ஆயிரக்கணக்கிலே பணம் கொடுத்து மேடையிலே முதலிடம் பிடித்துக் கொண்டார்கள். காங்கிரஸ்போல, முரண்பட்ட கொள்கையுடையோரல்ல நாம்—நாமேதான் மாநாடு நடத்தவேண்டும் — நம்மைப்போல் உள்ளவர்களிடமே காசு பெறவேண்டும். மாற்றார் மாநாடுகளுக்கு பணம் வசூலிப்பார்கள்; நாமோ காசு வசூலிப்பவர்கள்! காவலர் அவர்கள் கூறியதுபோல, "காசு இல்லாதவர்கள் - ஆனாலும் மனதிலே மாசு இல்லாதவர்கள்!" மாசற்ற நாம், காசற்ற நாம் — மாநாடு கூட்டும் வேலையிலே இறங்கியிருக்கிறோம், கைமுதலாக — காகிதத்தையும் பேனாவையும் வைத்துக்கொண்டு! மாநாட்டுப் பொருளாளர் அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிடநாடு' இதழிலே அறிக்கை போன்ற கட்டுரை தீட்டியுள்ளார்கள்; "நிதியனுப்பு தம்பி! என் வெளிநாட்டுப் பயணத்துக்கல்ல; விடுதலைப் போர் காணும் மாநாட்டுக்கு!" என்ற விதத்திலே!

சென்னையிலே நடைபெற்ற பொதுக் குழுவிலே ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களும் தங்கள் தங்கள் பங்கை உடனடியாக செலுத்துவதாக வாக்களித்திருக்கின்றனர். மாவட்ட செயலாளர்கள் அத்தனை பேருமே வெட்டிவா என்றுரைத்தால், கட்டிவரும் வீரர்கள். தஞ்சை இளங்கோ, திருச்சி தருமு, மதுரை முத்து, சென்னை பரிதி, கோவை சம்பத்து, தென்னாற்காடு சாம்பு, வடாற்காடு சத்தி, நெல்லை சாமி, நாஞ்சில் ஜான், செங்கற்பட்டு மணி, சேலம் சோமசுந்தரம், ராமநாதபுரம் பாண்டியன் இவர்களிலே யார் முந்திக்கொள்ளப் போகிறார்களோ; தெரியவில்லை — எந்த மாவட்டம் தன்னுடைய பங்கை முதலில் செலுத்திப் பெருமையடையப் போகிறதோ; அதுவும் புரியவில்லை— எல்லா மாவட்டங்களையும் விட எந்த மாவட்டம் அதிகத் தொகையளித்து பொருளாளரின் புன்னகையைப் பரிசாகப் பெறப்போகிறதோ; அதுவும் விளங்கவில்லை. ஆனால் ஒன்று; அந்தப் புன்னகையைப் பரிசாகப் பெற—பொதுச் செயலாளரின் பாராட்டைத் தட்டிக்கொள்ள—கழக உறுப்பினர்கள் அனைவரின் கைகுலுக்கைப் பெற—எல்லா மாவட்டங்களுமே போட்டி போட்டு வேலை செய்கின்றன என்ற செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது.

கழகத்தின் தேர்தல்களில் காட்டிய ஆர்வத்தைக் காட்டிலும் பன்மடங்கு அதிக ஆர்வத்தோடு ஆங்காங்கே செயலாளர்கள் பணி புரிகிறார்கள் என்ற தகவல் களிப்பிலாழ்த்துகிறது நம்மை. பணி புரிகிறார்கள் என்ற சேதி மாவட்டத்திலேயிருந்து வருகிறது—பூரிக்கிறோம். பணம் குவிகிறது என்ற சேதி பொருளாளரிடமிருந்து வரவேண்டுமே; அப்போதல்லவா பூரிப்பு பூரணத்துவம் பெறமுடியும்! இருபத்தையாயிரம்—இந்த ரூபாயை வைத்துக் கொண்டு மெல்ல மெல்ல மாநாட்டு வேலைகளைத் தொடங்கலாம் என்று எண்ணுகிறது வரவேற்புக் குழு. ஆயிரம்தான் கிடைத்திருக்கிறது என்கிறது, பொருளாளரின் கடிதம். ஆயிரம் எங்கே? இருபத்தையாயிரம் எங்கே? — நடுவிலே இருபத்தி நாலாயிரம் ரூபாய்கள்!—அப்பப்பா; பெரிய பள்ளம்— அந்தப் பள்ளத்தை மூடியாக வேண்டும்; பணத்தைக் கொட்டினால் மட்டுமே மூட—முடியும் அந்தப் பள்ளத்தை! பெருவெள்ளம்; சிறுதுளியால் ஏற்பட்டுத் தீரவேண்டிய பெருவெள்ளம்! மழை-வெள்ளம் வருவதற்குள் மாநாடு நடத்த வேண்டும்; நல்ல உள்ளங்கொண்டோர் அனைவரும் நாளைக்கே புறப்பட வேண்டும்; "நான் முந்தி, நீ முந்தி" என்று செயலாற்ற வேண்டும்.

இந்தப் போட்டியை அனைவருமே வரவேற்பர்—குறிப்பாக நமது பொருளாளர் மகிழ்ச்சியோடு வரவேற்பார் இந்தப் போட்டியை!

எங்கே—பேழை நிரம்பட்டும்—ஏழையை வாழ்விக்க, கோழையையும் வீரனாக்க—தாழைமுள் தாண்டி தனி அரசு எனும் பூ வெடுக்க திருச்சியிலே கூடுவோம்!—திராவிடம் பெறுவோம்!

நடுவிலே இருபத்தி நாலாயிரம் ரூபாய்! இடையிலே இரு மாதங்கள்கூட இல்லை! மாவட்டச் செயலாளர்களே!—தயார்! தயார்!!

சக்கரவர்த்தியின்
திருமகன்
27–5–55 முதல் துவங்கும்.

# தசாவதாரம்!




[ஆச்சாரியார் இப்போது அரசியல் துறவு பூண்டு 'வெறுமனே இருக்க மாட்டாமல்' விளம்பரம் தேடும் படலத்திலிறங்கி '**கல்கி**'யில் கட்டுரைகள் பொழிவதைப் பற்றி பிரபல கேலிச் சித்திர ஏடு '**சங்கர்ஸ் வீக்லி**'யில் வெளிவந்துள்ள சித்திரத் தொகுப்புதான் மேலே தரப்பட்டிருக்கிறது!]

(1) **ஆரம்பகாலம்** சொந்தக் கட்சியிலுள்ள சிறிய மீன்களை விழுங்கி தன்னைப் பலப்படுத்திக் கொண்ட **மச்சாவதாரம்!** (2) 1937—ஆமை வேகத்தில் மாகாண சுயாட்சி— **கூர்மாவதாரம்!** (3) 1940-41—திருச்செங்கோடு ஆஸ்ரம வாழ்க்கை—**வராகவதாரம்!** (4) 1942—காங்கிரசை எதிர்த்து போர்க்கோலம்—**நரசிம்மாவதாரம்!** (5) 19 8—வைஸ்ராய் பதவியை அளக்க **வாமனவதாராம்!** (6) 1951—டெல்லி அமைச்சராயிருந்தபோது பத்திரிகைகள் மீது பழிவாங்கும் படலம்—**பரசுராமாவதாரம்!** (7) 1952—ராமராஜ்யத்தில் கண்ட்ரோல் ஒழிப்பு காண்டம்—**ராமாவதாரம்!** (8) 1953-54 விரோதிகளை ஒழித்ததாக வெறும் புன்னகை—**பலராம அவதாரம்!** (9) 1955—அணுகுண்டுப் பசுக்களை ஆயன்குழலூதி மயக்கும் **கிருஷ்ணவதாரம்!** (10) கடைசியாக '**கல்கி**' **அவதாரம்!**

---

**செயல்வீரர்களே!**

**மாநில மாநாட்டு**

**நிதி சேர்க்கத்**

**தொடங்கிவிட்டீர்களா?**

---

## கொள்கை வளருது கோபுரம் போலே!

**திருத்தங்கல்**
(பாண்டியன் பூங்காவில்)
12—5—55
இரவு 9 மணிக்கு
தலைவர் :
எஸ். வி. செண்பசமூர்த்தி
பேசுவோர் :
கே. வி. கே. சாமி
எம். காளியப்பன்

**பாண்டமங்கலம்**
(திரு சோமசுந்தரம் திடலில்)
12—5—55
மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
அருண்மொழி
(இரவு 10 மணிக்கு 'போர்வாள்' நாடகம்)

**சிவகங்கை**
(இராமச்சந்திரன் நினைவுப் பூங்கா)
14—5—55
மாலை 7 மணிக்கு
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
மணவாளன்

**மதுரை**
(கீழச்சந்தைப்பேட்டை-அண்ணா இலவசப் படிப்பகம்)
15—5—55
மாலை 6 மணிக்கு

**நாவலர் நெடுஞ்செழியன்**
அவர்களுக்குப் பாராட்டு.
தலைவர் :
மதுரை முத்து
பேசுவோர் :
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
காஞ்சி கல்யாணசுந்தரம்
ஆசைத்தம்பி
சௌந்தரராசன் பி. ஏ.,

**சிதம்பரம்**
17—5—55
பொதுச்செயலாளர்
**நெடுஞ்செழியனுக்கு**
வரவேற்பு.
தலைவர் :
தில்லை. வில்லாளன்
பேசுவோர் :
ஏ.கோவிந்தசாமிஎம்.எல்.ஏ.
சுரதா
போ. காசிலிங்கம்

**லெட்சுமிநாராயணபுரம்**
22—5—55
(இரவு 7—30 மணிக்கு)
தலைவர் :
எஸ். நடேசன்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
மதுரை முத்து
எஸ். கே. செல்வம்
ஏழுமலை




நண்பா! அவள் பேசுவதில்லை-பிறவி ஊமையல்ல! அவள் கூவத் தெரியாத குயில் அல்ல—வீணையின் நாதமோ — வேணுகானமோ என ஐயுரும் வண்ணம் கூவிய குயில் தான், இன்று கூவ முடியாமல் புவியிலே உலவுகிறது! கேட்போர் காதெல்லாம் இனிக்க இனிக்க நாதம் எழுப்பிய வீணை, வீணனின் சதியால்-புழுதியிலே புரளுகிறது, பேச முடியாமல்! ஆடிப்பாடிய வானம்பாடியின் பவழவாய் அடைப்பெற்றிருக்கிறது, அழகு மொழி சிந்தாமல்! கோவை இதழ் திறந்து-கோர்த்த முத்துப் பற்களைக்காட்டி, பாகுமொழி பேசிய நிலா மடந்தை — பேசாமடந்தையாகிவிட்டாள்! அவள் வாழ்விலே நிகழ்ந்த ஒரு பயங்கரச் சம்பவம்-அந்தப் பேசும் பொற்சிலையை பேசாப் பதுமையாக்கி விட்டது. சூதுக்காரன் ஒருவனின் சதியால் சூதறியா சுந்தரியின் சுந்தர வாழ்வு சூன்யமாகிவிட்டது. அந்த சோகச் சித்திரத்தை — பத்தரைமாற்றுத் தங்கத்தின் பரிதாபக் கதையைக் கூறுகிறேன்; கேள்:

*

இந்திரா! அந்தியூரின் காந்தச் சிலை! அவளுடைய வட்டக் கரு விழிகள் சுட்டெரித்தது, வாலிபப் பட்டாளத்தை! வாடாத அவளின் மலர்மேனி பலரின் மனதையும் வாடச் செய்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. 'தொடாதே' என்று கூறும் பருவத்தின் கர்வங்கள், பார்ப்போரை யெல்லாம் பைத்தியமாக்கியது. அலை அலையாகச் சுருண்ட நீண்ட கூந்தல், மலையே புரண்டாலும் நிலைகுலையாதவரின் உள்ளத்தையும் கலைத்தது. "மது ஊறும் அவளின் இதழை சுவைக்க மாட்டோமா? அது தரும் இன்ப போதையில் நாம் உலகத்தையே மறக்கலாமே!"—என்று எண்ணி எண்ணி ஏங்கியவர்கள் ஏராளம். அந்தச் சொர்ணச் சிலையை தன் இதயக் கோயிலில் வைத்து பூஜித்தவர்கள் பலர். வாலிபர் விழிகளுக்கு அவள் ஓர் விருந்து. அவர்களின் நினைவிலேயும் நின்றாள்—கனவிலும் சென்று கலங்கவைத்தாள். இதயத்தில் வைத்துப் பூஜித்தால் மட்டும் போதாது; தன் இல்லத்திலேயும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தான்—இல்லை, இல்லை—விரும்பினான் சந்திரன். இந்திரா போகுமிடமெல்லாம் அவளின் நிழல்போல் பின் தொடர்வான். ஆனால் அவள் அவனை திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. உலகத்தையே பணயமாக வைத்தாவது இந்த உல்லாசியின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டும் என்று பலமுறை முயன்றான். ஆனால் அந்தக் கள்ளமில்லா வெள்ளி நிலவின் நெஞ்சு நெகிழவில்லை—மனம் மாறவில்லை. என்றும்போல் போவாள்; வருவாள்—ஆனால் அவளின் வேல் விழிகளை யார் மேலும் வீசியதில்லை. அந்த வாசப் புதுமலர் மணம் வீசிக் கொண்டுதானிருந்தது. ஆனால் யாரும் அதைத் தொட்டுப் பறிக்க முடியவில்லை. கட்டுக் காவலையும் மீறி அவளின் இதயத்தை எட்டிப் பிடிக்க முயன்ற சந்திரனின் உள்ளத்தை வேதனைத் தீ சுட்டு வாட்டியது. வானமே இடிந்து விழுந்தாலும்—இந்த வையகமே புரண்டாலும் அந்த வனிதை இந்திராவை ஒரு முறையாவது வாரி அணைத்து மகிழ வேண்டும் என்ற முடிவிற்கு துரத்தப்பட்டான் சந்திரன். ஏமாற்றத்தின் எதிரொலி அவனை வெறி கொள்ளச் செய்தது. நாளுக்கு நாள் 'வெறி'யும் வளர்ந்துகொண்டேயிருந்தது; காலமும் கரைந்துகொண்டேயிருந்தது.

ஒரு நாள், மேளதாளம் முழங்க—வாழ்த்தொலிகள் விண்ணதிர—மணமாலை சூட்டி — பொற்றாலி கட்டி—உற்றார் உறவினர் அறிய இந்திராவை, தன் உரிமையாக்கிக் கொண்டான் பரந்தாமன்.




அந்தப் பொற்கொடியின் கழுத்திலே மின்னிய தாலி, வேலியாக இருந்தது மற்றவர்களுக்கு. அந்த இளஞ் சிட்டுகள் காதல் கீதம் பாடிக் கொண்டே வாழ்க்கை வானில் உயர உயரப் பறந்து கொண்டிருந்தனர். குடும்ப விளக்கானாள் இந்திரா. ஆனால் சந்திரனின் இருண்ட இதயத்தில் அது ஒளி வீசவில்லை. ஆசை போதை ஏறிய அவன் உள்ளம், அவள் மாற்றானின் மனைவி என்பதையும் ஏற்க மறுத்தது. ஏமாற்றத்திற்கு சமாதானம் கூறாமல், அந்த ஏந்திழையாளை அடைவது எப்படி என்பதை எண்ணுவதிலேயே தன் கவனத்தை செலுத்த ஆரம்பித்தான். "அவள் என்னை ஏமாற்றி விட்டாள்—ஆனால், நான் அவளை விடப்போவதில்லை. உலகத்தின் எந்தக் கோடிக்கு ஓடினாலும் நான் விடாமல் துரத்திப் பிடிப்பேன்—வானத்து நிலாவாக அவள் மாறினால், நான் மேகமாக மாறி அணைப்பேன்— மாநிலத்து மலராக மாறினால், நான் தென்றலாக மாறி தழுவுவேன்—தேனை சுவைக்காமல் விடமாட்டேன்..." —சந்திரனின் காதல்வெறி வினாடிக்குவினாடி வளர்ந்துகொண்டே யிருந்தது, வளர் பிறை போல. சந்திரன் இந்திராவின் வீட்டின் எதிர் வீட்டிற்குக் குடி ஏறினான்; வலை வீசிக் கொண்டே யிருந்தான் அந்தக் கலைமானைப் பிடிக்க.

காலம் என்னும் திருடன் இதை எல்லாம் கவனிக்காமல் ஓடிக் கொண்டே யிருந்தான். இந்திரா ஒரு சேய்க்குத் தாயானாள். ஆனால் சந்திரன் தன் முயற்சியை கைவிடவில்லை. 'காலம் கனியக் கனிய அந்த கனிமொழியாளும் கனிந்து விடுவாள்—பனிப் பார்வையை வீசுவாள்—இனி என்ன? இன்பம் கொள்ளை! — கொள்ளை!!' என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்தான் சந்திரன். ப[illegible]லெல்லாம் சன்னலின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டே—எதிர் வீட்டில் நடமாடும் நிலவைப் பார்த்துக் கொண்டே கால் கடுக்க நின்றுகொண்டிருப்பான். இரவெல்லாம் அந்த உதய நிலாவின் இதயம் என்று இளகும் என்று எண்ணிக் கொண்டே காலத்தைக் கழிப்பான்.

அமைதியாக ஓடிக்கொண்டிருந்த இந்திராவின் வாழ்விலே பார்வதி ரூபத்திலே புயல் வீச ஆரம்பித்தது. பார்வதி—பக்கத்துத் தெருப் பாவை. பரந்தாமனின் ஆசை நாயகியானாள். கண்ணீர் வடிக்கும் இந்திராவை விட்டு விட்டு, பார்வதியின் வீட்டை வட்டமிடலானான் பரந்தாமன். கெஞ்சினாள்—கதறினாள்! ஆனால் அவனின் நெஞ்சு இளகவில்லை. பார்வதியின் மடியே தஞ்சம் எனக் கிடந்தான். மலருக்கு மலர் தாவும் வண்டை-மரத்திற்கு மரம் தாவும் மந்தியைத் திருத்தமுடியுமா? மாற்றானின் மையலிலே சிக்கிச் சீரழியும் தன் கணவனை நினைத்து நினைத்து, இரவெல்லாம் கண்ணீர் வடிப்பாள். தையலின் தலையணையெல்லாம் கண்ணீரால் நனையும். "அவர் திரும்பி வரமாட்டாரா—வந்து என் களி தீர்ப்பாரா" என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பாள். கண்கள் பூத்துப்போயினவே தவிர, அவளின் வாழ்வுச் சோலையில் புது மலர் பூக்கவே இல்லை. இரவெல்லாம் கண் விழித்து காத்துக் கொண்டிருக்கும் இந்திராவின் மேல் தன் கண்களைத் திருப்பினான் சந்திரன். வேதனையால் தாக்குண்ட அந்த வனிதை இதையெல்லாம் கவனிக்கவே இல்லை. மழலை மொழி பேசும் தன் செல்வத்தின் மேல் தன் சிந்தையெல்லாம் திருப்பி காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள், அந்தப் பரிதாபத்துக் குரியவள். பரந்தாமன் வருவான் — பேசுவான் — பிரியப்படாமல் வீட்டிலே தங்குவான்—விரும்பினால் நடுநிசியில் எழுந்து போவான். வாழ்வே கசந்துவிட்டது இந்திராவுக்கு. அவள் உதிரத்தில் உதித்த செல்வன்தான் அவளின் உயிரை காப்பாற்றிக் கொண்டிருந்தான். அவன் இல்லாதிருந்திருந்தால் என்றோ தன் வாழ்வுக்கு ஒரு முடிவு தேடிக்கொண்டிருப்பாள். நாட்கள் உருண்டோட ஓட இந்திராவும் தன் மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டாள். தன் முழு கவனத்தையும் தன் செல்வத்தின் மேல் செலுத்தினாள்.

ஒருநாள் இரவு! வானம் இருண்டிருந்தது நிலவு நங்கை தன் தாரகை தோழிகளோடு இருட்டுக் கள்ளனுக்கு பயந்து எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டிருந்தாள். இந்திரா ஏதோ சப்தம் கேட்டு கண்விழித்தாள். பக்கத்திலே படுத்திருந்த பரந்தாமனைக் காணோம். "சரி வழக்கம்போல போய்விட்டார்—வழக்கம் போலவே வருவார்" என்று எண்ணிக்கொண்டே திறந்திருந்த கதவை சிறிது மூடி வைத்தாள். வேதனை வேல்கள் தாக்கின...கண்கள் நீரைக் கொட்டின... இதயப் புண்ணிலிருந்து இரத்தம் சொட்டியது.

"அம்மா — பசிக்குது" என்று சிணுங்கிக்கொண்டே புரண்டு படுத்தான் அவளின் பச்சிளம் பாலகன். 'அழாதேடா என் செல்வமே — பாலை சுடவச்சி கொண்டுவர்றேன்" என்று கூறிய

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# பொன்முடியின் 'கார்டு'

அன்புள்ள குமார்,

உன் முடங்கல் கண்டேன். வரவர உன் உள்ளம் அதிகமாக முடங்குகிறது. காரணம் தெரியவில்லை. குன்றக்குடியார், பொதுத் தேர்தல் பற்றி பேசியவைகளைக் குறிப்பிட்டு என் எண்ணத்தைக் கேட்டிருக்கிறாய். நண்பனே! காலம் எந்த அளவுக்கு மாறியிருக்கிறது என்பதை நீயே புரிந்துகொள்வாய் என நம்புகிறேன். மடத்திலே யிருப்பவர்கள் மக்கள் மன்றம் வரவேண்டுமாம்—காலம் இப்படி மாறுகிறது! அவர்களின் கருத்து மட்டும் மாறாதாம். காரிலே சவாரி—ஆனால் அந்தக் காருக்குக் காவித் துணியால் மெத்தை, தலையணை முதலியன! சிரிப்புத்தான் வருகிறது நண்பா, சிரிப்புத்தான் வருகிறது!—பொதுத் தேர்தலில் குன்றக்குடியார் நாஸ்திகர்களுக்குப் போட்டிபோடப் போகிறார் என்று குறிப்பிட்டிருந்தாய். போடட்டுமே — கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டு மடத்துத் தோட்டத்தில் கஞ்சா பயிரிடும் கடைந்தெடுத்த 'நாஸ்திகர்களுக்கு'க் கடுமையான போட்டி போடட்டுமே: யார் வேண்டாமென்றது?—ஆனால் ஒன்று, அவரது பேச்சிலே திராவிடக் கழகங்களை—தனது தமிழ் மறுமலர்ச்சிப் போராட்டத்துக்கு ஆதரவு கேட்டிருக்கிறார். அதிலிருந்து திராவிடர் இயக்கத்தை அவர் நாஸ்திக இயக்கம் என்று கூறவில்லை என்பது புலனாகிறது—அடிகளாரின் பேச்சு அவ்வளவு முக்கியமானதில்லை என்று கருதியே—உனக்கு விளக்கக் கடிதம் நீளமாக எழுதாமல், இந்தக் கார்டு எழுதுகிறேன்.

அன்புள்ள,
பொன்முடி.



## 22.
### மயக்கம்

"என்ன, மகாவிஷ்ணு தோன்றினரா? உண்மையாகவா?" என்று ஆவலோடு கேட்டாள் பரிமளா.

"உண்மையாகத்தான்—அவர் நின்று கொண்டிருந்த திசை நோக்கி ஓடினேன். நான் ஓட ஓட அவரும் தொலைவில் போவதாகத் தெரிந்தது-நான் விடவில்லை—எதிரேயிருக்கிறது என்ன, ஏது என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் அவரிடமே ஓடிவிட்டேன்" பரிமளாவுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

'புதிய புராணமாயிருக்கிறதே இது! பசியால் ஒரு இளைஞன் துடித்ததைக் கண்டு பகவான் ஓடோடியும் வந்தார் என்று இப்போதுதான் கேள்விப்படுகிறேன்'

"இது ஒன்றும் புதிதல்லவே, பரிமளா! சிற்றன்னைக் கொடுமையால் சீரழிந்த துருவனுக்கு சங்கு சக்கரத்தோடு காட்சி தந்தார் என்று படிக்கவில்லையா? பிரகலாதன் என்ற இளைஞன் விஷ்ணுவின் அருளால், பிராணபத்துக்கள் பலவற்றிலேயிருந்து மீண்டான் என்று கதை கேட்டதில்லையா? பதினறு ஆண்டுடைய மார்க்கண்டேயன், திருக்கடையூரிலே தெய்வத்தின் அருளால் எமனை வென்றான் என்று புராணம் கூறுகிறதே!"

"புராணம் கூறும் கதை கேட்டிருக்கிறேன்; படித்துமிருக்கிறோம். ஆனல் உங்களைப் போல துன்பத்தில் சிக்கிய உண்மைத் 'துருவன்' களுக்கு எதிரே என்னப்பன் தோன்றி கருணை மழை கொட்டினர் என்பதை கண்ணல் கண்டதுமில்லை; கண்டவர் சொல்லிக் கேட்டதுமில்லை."

"நான் கண்ணல் கண்டேன்; விஷ்ணு மூர்த்தி துருவனுக்கு அபயங் கொடுத்ததை நான் கண்ணல் கண்டேன். விஷ்ணு மூர்த்தி மட்டும் இல்லாவிட்டால் இந்தத் துரை இவ்வளவு நாள் உயிரோடிருந்திருக்க முடியுமா?"

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"கொஞ்சம் பொறுமையாகக் கேளேன் பரிமளம்! இதோ, பெரியவர் எவ்வளவு அமைதியாகவும் நிதானமாகவும் கதை கேட்கிருர். நீயும் அதைப் போலக் கேளேன்!"

"ம்; சொல்லுங்கள்."

"விஷ்ணுவிடம் ஓடினேன? பசியால் ஏற்பட்டிருந்த மயக்கமும் களைப்புங்கூட மறந்து போய்விட்டது — அவ்வளவு வேகமாக ஓடினேன். விஷ்ணுவிடம் தாவிப் பாய்ந்தேன். சங்கு சக்ராயுதபாணியாக, நீலமேக சாமள வர்ணத்தோடு, மகா விஷ்ணு நின்றுர். அங்கே என்னைப் போலவே ஒருவன் அவருக்கெதிரே நின்று கொண்டிருந்தான்"

"அது யார்?"

"அவன் தான் துருவன்!"

"துருவன?"

"பரிமளா!—நான் ஏதோ பசி மயக்கத்தில் தூங்கி, அந்தத் தூக்கத்தில் இப்படி ஒரு புராணக் கனவு கண்டதாகச் சொல்லி உன்னை ஏமாற்றப் போகிறேன் என்று எண்ணுகிருயா? இல்லை பரிமளா; இல்லை-இது நிச்சயமாகக்கனவு இல்லை — கண்ணெதிரே நடந்ததுதான்!"

"சரி — தொடருங்கள்!"

"மகா விஷ்ணுவின் காலைப்பிடித்துக் கொண்டேன். உடனே பெரிய சப்தம்—"

"சப்தமா? என்ன சப்தம்?"

"ஜனங்கள் கூச்சல் போட்டார்கள்!"

"ஜனங்கள் ஏது? வைகுண்ட வாசிகளா?"

"கேள் பரிமளா! - சப்தம் கேட்டது – என் கண்களைக் கசக்கிக் கொண்டு, மனசைக் கொஞ்சம் நிதானப்படுத்திக் கொண்டேன்."

"அதாவது விழித்துக்கொண்டீர்கள்!"

"இல்லை-ஒன்றும் புரியாமல் விழித்தேன்-"அய்யோ" என்று அலறிக் கொண்டு துருவன் ஓடிவிட்டான். விஷ்ணுவும் திகைத்துப் போய் நின்றுர். ஜனங்கள் என் பக்கம் ஓடி வந்தார்கள். ஒரே ரகளை—குழப்பம்!"

"பிறகு?"

"பிறகென்ன? எனக்கும் ஜனங்களுக்குமிடையே ஒரு திரை விழுந்தது. மகாவிஷ்ணு என்னை ஆத்திரத்தோடு பார்த்து, "யாரடா நீ?" என்று கேட்டார். "விஷயம் புரியாமல்..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தேன்...... அதற்குள் அவர் என்னைப் பரபர வென்று இழுத்துக்கொண்டு ஓடினர்."

"எங்கே?..."

"மேக் அப் பண்ணுகிற இடத்துக்கு!"

"ஓகோ-நாடகமா?" — பரிமளா சிரித்தாள்.

"இல்லை பரிமளா! தெருக் கூத்து!" என்றுன் துரை.

"ம்-அப்புறம் என்ன நடந்தது?"

"என்ன நடக்கும்? உண்மையான விஷ்ணு மூர்த்தியின் காலில் விழுந்தேன்."

"மறுபடியும் சிக்கல் உண்டாக்குகிறீர்களா?"

"இல்லை — உண்மையான விஷ்ணுமூர்த்தி என்பவர் அந்த நாடகக் கம்பெனியின் முதலாளி. அவரது துருவன் நாடகம், அந்த ஊர் திருவிழாவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் முன்னிரவில் பசியால் மெலிந்த நான், களைப்புற்று தெருக் கோடியிலே படுத்துத் தூங்கி விட்டேன். விழித்தபோது நாடகம் நடந்துகொண்டிருக்கிறது — துருவனுக்கு மகா விஷ்ணு காட்சி கொடுக்கும் கட்டம் — அதிலேதான் நம்ப கலாட்டா! பாலப் பருவத்தின் அறியாமையும், பசியின் கொடுமை தந்த மயக்கமும் சேர்ந்து என்னைக் குழப்பி விட்ட காரணத்தால், விஷ்ணு வேடத்தைக் கடவுள் தோற்றம் எனக்கருதி ஏமாந்துவிட்டேன். கூடியிருந்த ஜனங்களை மிதித்துக் கொண்டு, மேடையிலே பாய்ந்து, துருவனை விரட்டி, விஷ்ணு வேடதாரியின் மனதையும் துளைத்து, இவ்வளவு கலவரம் செய்த என்னை சும்மா விடுவார்களா? முதலாளி விஷ்ணு மூர்த்தியிடம் கொண்டு போய் விட்டார்கள். அவர் பெயர்தான் விஷ்ணுமூர்த்தியே தவிர, இரணியனைப் போல இருந்தார் முறுக்கிய மீசையோடு! வயதானவர்-வாலிபத்திலே அரிச்சந்திரா நாடகத்தில் சந்திரமதி வேஷம் போட்டுக் கொண்டு, மயானகாண்ட சீனை நடித்தாரேயானுல், ஊரே அழுமாம்!—நந்தனர் கதையிலே வேதியர் பாத்திரம் தாங்குவாராம்; "மாடு தின்னும் புலையா! உனக்கு மார்கழித் திருநாளா?" என்ற பாட்டை அபாரமாகப் பாடுவாராம். ஒருநாள் கொஞ்சம் தண்ணீர் போட்டுக் கொண்டு, வேதியர் வேஷம் நடித்தாராம்; அதாவது ஒரு குடுக்கை பால் சாப்பிட்டாராம்-அவ்வளவுதான்; அன்று பாட்டு அபாரமாம்! "மாடு தின்னும் புலையா-உனக்கு மார் கழித் திருநாளா?" என்றுபாட வேண்டிய வேதியர், "புல்லைத் தின்னும் மாடா! உனக்கு மார் திரு கழிநாளா?" என்று பாடினராம். நல்லவேளை, அந்தக் கிராமாந்திர ஜனங்களும் பாதிக்கு மேல் நீரில் மிதந்தவர்கள். அதனல் விஷ்ணுமூர்த்தி தம்பித்தாராம். இப்படியெல்லாம், அந்த முதலாளியைப் பற்றி பல கதைகள் உண்டு.

"அவரிடம் கொண்டுபோய் என்னை நிறுத்தினர்கள். ஆள், பார்வைக்கு பயங்கரமாயிருந்தாலும், இளகிய இருதயம் படைத்தவர். நான் என்னுடைய நிலைமையை அவரிடம் விளக்கிச் சொல்லி, அவரது காலைப் பிடித்துக் கொண்டு அழுதேன். விஷ்ணுவேடம் போட்டவன் மட்டும், என்னை மன்னிக்கத் தயாராயில்லை.

# புதையல்

மு. கருணாநிதி

ஏனென்றால், அவனுக்கு அந்த நாடகத்தில் ஒரே ஒரு சீன்தான்! அதை நான் கலாட்டா செய்து கெடுத்து விட்டேனும்; அதனால்! முதலாளி விஷ்ணுமூர்த்தி என்னை மன்னித்ததோடு, அந்தக் கம்பெனியிலேயே வேலைக்கும் சேர்த்துக் கொண்டார். முதலில் நாடக மணி அடிக்கும் வேலை எனக்கு. பிறகு சீன் இழுக்கும் வேலை கிடைத்தது. அந்த வேலையிலிருந்து நான் நடிகனாகவே ஆகும் ஒரு சந்தர்ப்பமும் வாய்த்தது. 'ஔவைப் பிராட்டி' நாடகம் நடக்கிறது எங்கள் கம்பெனியில்!—இப்போதெல்லாம் தெருக்கூத்துகளாக இல்லாமல், ஒரு ஊரில் போய் ஒரு மாதம் தங்கி தொடர்ந்து நாடகங்கள் நடத்துகிற அளவுக்கு எங்கள் கம்பெனி வளர்ந்திருந்தது. ஊரின் மத்தியிலே கொட்டகைப் பந்தல் போட்டு கட்டணம்வைத்துவசூல் செய்து நாடகங்கள் நடத்தினோம். அப்படி நடக்கும்போதுதான் ஒரு நாள் நடிகனானேன். ஔவையார் நாடகம்; முதல் நாலைந்து காட்சிகள் முடிந்துவிட்டன. ஔவையை ஏமாற்றுகிற முருகன், மாட்டுக்கார பையனாக நாவப்பழ மரத்தில் உட்கார்ந்திருக்கும் காட்சி உண்டல்லவா அதில் மாட்டுக்காரனாக நடிக்கிறவன் ஏதோ தவறு செய்தான் என்று, மேக் அப் அறையில் — முதலாளியிடம் அடி வாங்கினான். அழுதுகொண்டே நின்றான். பிறகு, நாவப்பழ சீன் வந்தது. ஔவையாரும் மேடைக்கு வந்து விட்டாள், பாடிக்கொண்டே! மரத்தை அண்ணாந்து பார்த்தால், அங்கே யிருக்க வேண்டிய பையனைக் காணோம்.

என்ன செய்வாள் ஔவை? திகைத்தாள். இதைப்பார்த்த நான் உடனே ஒரு முடிவுக்கு வந்தேன். நாடக மேடை உட்புறமாகவே பரணில் ஏறி, மேலே யிருந்தபடியே மேடையில் உள்ள மரத்தில் இறங்கி, மாட்டுக்காரப் பையனைப் போல உட்கார்ந்து கொண்டேன். நான் சாதாரணமாக உடுத்தியிருந்த கந்தல் ஆடை அதற்கு மிகவும் உதவி செய்தது. இந்த விஷயம் முதலாளிக்குத் தெரிந்தது. மறுநாள் முதல் நானே மாட்டுக்காரப் பையனாக வேடம் தரித்தேன். மாட்டுக்காரனிலிருந்து, மார்க்கண்டேயர் வரையிலே மளமளவென்று பெரிய வேடங்கள் கிடைத்தன, எனக்கு!

துருவன் வேடம் என்னைப் போல யாரும் செய்ததில்லை என்று அப்போது ஊரிலே பெயர்!—பிரகலாதா நாடகத்தில், நரசிம்மாவதாரம் தூணைப் பிளந்துகொண்டு இரணியனைக் கொன்று குடலைக் கிழித்து மாலை போட்டுக் கொள்ளும்போது ஒரு விருத்தம் பாடுவேன்; கொட்டகையே அதிரும் கைதட்டல்! மார்க்கண்டேயன் வேஷம் போட்டபோதுதான்—ஒரு சமயம் என் உயிருக்கும், சிவன் உயிருக்கும் ஆபத்து வந்துவிட்டது. அதாவது; எமன் மார்க்கண்டேயனாகிய என்னைத் துரத்துகிறான். நான் ஓடிப்போய் சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொள்கிறேன். எமன் பாசக் கயிற்றை வீசுகிறான். உடனே சிலை வெடித்து சிவபெருமான் புறப்பட்டு எமனைக் குத்துவதுபோல ஈட்டியோடு பாயவேண்டும்-இது காட்சி!

எமன், என்னை வழக்கம்போலத் துரத்தினான். நான் ஓடிப்போய் சிவலிங்கத்தைப் பிடித்துக்கொண்டேன். எமன் பாசக் கயிறு வீசுவதற்குள் சிவலிங்கம் வெடித்து சிவன் புறப்பட்டு விட்டார். தாமதமாக வீசப்பட்ட பாசக் கயிறு. என் மீது விழுவதற்குப் பதிலாக, சிவனின் கழுத்திலே விழுந்து, அவர் கழுத்து இறுகி விட்டது. கழுத்து இறுகியதால், சிவன் எமன் மீது வீச வேண்டிய ஈட்டியை என் மார்பின் மீது ஓங்கி வீசினார்— 'மார்க்கண்டேயன்'— மயக்கமுற்று விழுந்து விட்டேன். சிவனும் உருண்டு விட்டார். எங்கள் இருவருக்கும் 'எமன்' உதவி செய்ய வேண்டியதாயிற்று. எமன் வேடதாரி, நல்ல நாட்டு வைத்தியருங் கூட. அவருடைய சிகிச்சைக்குப் பிறகு உடல் நலம் பெற்றேன் நான். நல்லதங்காள் நாடகத்திலும் நான்தான் மூத்த பிள்ளை. கிணற்றங்கரையிலே நின்றுகொண்டு நான் பாடும் பாட்டுக்கு — "ஒன்ஸ்மோர்" விழாத நாளே கிடையாது. நல்லதங்காள் வேஷம்கூட நான் போட்டிருக்கிறேன். நல்லதங்காள் நாடகத்தில் எங்கள் கம்பெனியில் நிறைய வேடிக்கைகள் நடந்திருக்கின்றன. ஒருநாள் நான் நல்லதங்கைவேஷம்போட்டேன். வாழைத்தண்டை வைத்து அடுப்பெரிக்கும் கட்டத்தில் அன்று பெரிய தமாஷ் நடந்தது. வழக்கமாக, வாழைத்தண்டை மண்ணெண்ணெயில் நனைத்து வந்து வைத்திருப்பார்கள். நெருப்புப் பட்டதும், அது எரியும். ஜனங்களும் கை தட்டுவார்கள். அன்றைக்கு எண்ணெய் ஊற்றி வைக்க மறந்து விட்டார்கள் போலும். நல்லதங்காள், "நான் பத்தினியானால் வாழைத்தண்டு எரியட்டும்!" என்று காளிபோலக் கத்தியும், கதறியும் பயனில்லை!

விஷயம் விளங்கிவிட்டது நல்லதங்காளுக்கு — என்ன செய்வதென்றே புரியவில்லை எனக்கு!— உள்ளே ஓடி வந்தேன். மண்ணெண்ணெயை ஒரு கண்ணாடிக் குவளையில் ஊற்றி எடுத்துக் கொண்டு, மேடைக்கு வந்தேன். இதுபோலப் பேசினேன்:

"அஷ்டதிக்குப் பாலகர்களே! இதுவரையிலே இந்த நல்லதங்காள் வெறும் வாழைத் தண்டை மட்டுமே எரித்தாள். இப்போது இவள் அசல் பத்தினி என்பதைக் காட்டுவதற்காக, இதோ கொஞ்சம் தண்ணீரையும் அடுப்பிலே ஊற்றி, வாழைத் தண்டைப் பற்ற வைக்கிறேன்"

—என்று புதிய வசனம் பேசிவிட்டு, எண்ணெயை அடுப்பிலே ஊற்றி, நெருப்புவைத்தேன். என்றைக்கும் விட அன்றைக்கு அந்த சீன் பலே ஜோர்!—பிரமாதமான கரகோஷம்!

—அரிச்சந்திரா நாடகத்திலே நான் லோகிதாசன் வேஷம் போடுவதுண்டு. லோகிதாசன் நாடக மேடையில் பாம்பு கடித்து இறக்கும் காட்சி தத்ரூபமாக இருக்கும். சந்திரமதியின் புலம்பலும் மிகக் கவர்ச்சியாக இருக்கும், மக்களுக்கு!— லோகிதாசனாகிய நான், பாம்பு கடித்து இறந்து கிடக்கிறேன். என்னை சந்திரமதி மயானத்தில் கொண்டு போய்க் கிடத்தியிருக்கிறாள். அரிச்சந்திரன், சந்திரமதி தர்க்கம் முடிந்து சந்திரமதியை வெட்டப் போகிறான் அரிச்சந்திரன். நான் பிரேதம் போலவே, மூச்சுவிடுவது ஜனங்களுக்குத் தெரியாமல் சிதைமேல் படுத்திருக்கிறேன். எனக்காக அடுக்கப்பட்ட வரட்டியிலே தேள் இருந்தது போலும். அதை யாரும் கவனிக்கவில்லை. அது நன்றாகக் கொட்டிவிட்டது என்னை. "அய்யோ! தேளு! தேளு!" என்று அலறியபடி எழுந்து விட்டேன். சந்திரமதியை வெட்ட, வாளெடுத்த அரிச்சந்திரன் திகைத்து விட்டான். வாள், சந்திரமதியின் கழுத்திலே மாலையாக விழுந்து, பிறகு பரமசிவன் வந்து, லோகிதாசனை உயிர் பிழைக்க வைக்கவேண்டும். வரட்டியிலேயிருந்த தேள், கதையையே மாற்றி விட்டது! பாம்பு கடித்து இறந்தவனை தேள் எழுப்பி விட்டது. நல்லகாலம்; பரமசிவன் வேஷம் போட்டவன் கொஞ்சம் சமயோசித புத்திசாலி!—அவன் மேடைக்கு ஓடி வந்தான்!

"அகோ, வாரும் பிள்ளாய் அரிச்சந்திரா! உன்னுடைய சத்தியத்தை மெச்சினோம். உன் மனைவியின் குரல் கேட்டு, உன் மகனைக் காப்பாற்ற கைலாயத்திலிருந்து வேகமாக வந்தோம். வரும் வழியில் காளைமாட்டின் கால் முறிந்துவிட்டது. அதை 'ரிப்பேர்' செய்துகொண்டு வர நேரமாகுமே என்று யோசித்தோம். அதற்குள் லோகிதாசன் உயிர் எமலோகம் போய்விட்டால் திரும்ப 'வாபஸ்' பெற முடியாதே என்று, வழியிலே சந்தித்த வாயு பகவானை அனுப்பினோம். அவர் தேளாக உருவெடுத்து, பாம்பு கடித்து மாண்ட பாலகனை எழுப்பி விட்டிருக்கிறார் — மங்களமுண்டாகட்டும்—சுபம்!"

என்று ஒரு புது பிரசங்கம் செய்தான். அதற்கும் ஜனங்கள் கை கொட்டினார்கள். எனக்கோ தேள் கொட்டிய வலிதாங்க முடியவில்லை. இப்படி கூத்துங் குதூகலமுமாக வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. நாலைந்து ஆண்டுகள்

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்






# 4. கற்பழி காண்டம்!

## அயோவின் அலறல்!

அண்டர் நாயகன் — அமரர் கோமகன்—கண்டவர் காமுறும் சீயஸ் காம நோய் பிடித்துவிட்டால் மிருகமாகி விடுவான். வஞ்சியரின் கிஞ்சுகச் செங்கனி வாய் பருகி—முயங்கி மயங்க, தேவர் தலைவன் நினைத்துவிட்டானேயானல், நினைப்பு நடப்பாகும்வரை அவன் கண்ணயர மாட்டான். தன்னுடைய சேஷ்டைகள் முற்றும் உணர்ந்த பத்தினியாம் ஹீராவுக்கு மயக்க மருந்து கொடுத்துவிட்டாலாவது, சீயஸ் காம வேட்டைக்குப் புறப்பட்டு விடுவான்.

தேவ லோகத்து அரம்பையரை விட பூலோகத்து மாதரசிகள்மீதுதான் சீயஸ் மோக வலை வீசுவது வழக்கம். காசுக்கு உடல் விற்கும் வேசிகள் என்றும், உப்பரிகையில் உலவும் அந்தப்புரவாசிகள் என்றும், 'காமப் படியளப்பதி'லே சீயஸ் வேற்றுமைப் பார்ப்பதில்லை. பத்தினிகளைக் கற்பழிப்பதில் பரமசிவனாகவும், பெற்ற மகளையே மனையாட்டியாக்கிக் கொள்ளும் விதத்தில் பிரம்மதேவனாகவும், லீலா விநோதங்கள் பல புரியும் கிரேக்கப் புராணத்து கடவுளர் தலைவனல்லவா, அவன்? எனவேதான் அரசகுமாரி அயோ தேவியை ஒரு நாளாவது அடைய வேண்டுமென்று நினைத்தான். நினைப்பதை முடிப்பதுதானே தேவர்கள் வேலை!

சீயஸ் எண்ணிய தருணத்திலேயே ஏந்திழைகளைத் தழுவிடும் வண்மையும், வழிவகையும் உணர்ந்தவன். இருந்தும் அவன் கல்லாலடித்து கனியாக்குவதை விட, இயற்கையாகப் பழுப்பதிலேதான் தனிச் சுவை யிருப்பதாக உணர்ந்தவன். எனவேதான் அவன் புதுப் புது கனவுகளை, அயோ தேவியின் நாடி நரம்புகளையெல்லாம் முறுக்கேற்றும் விதத்தில், அவள் தூங்கும்போது அவள் மீது ஏவினன்.

அயோ கண்ணயர்வாள். அவளது இமைகளின் இடுக்கிலே சீயசின் மிடுக்கான தோற்றம்தான் காட்சியாகும். நித்திரையெல்லாம் அவன் சித்திரம்தான்!

மனித இனத்தைச் சேர்ந்த ஆண்களுக்கே அடங்கிவிடும் பெண்கள், ஆண்டவனே ஆலிங்கனத்தக்கு அழைத்தால் ஏன் மறுக்கின்றனர்? சீயஸ் தோண்டிய படுகுழியிலே அயோ வீழ்ந்து விட்டாள்.

இருந்தபோதும், அயோவிடம்தான் கொண்டிருக்கும் நட்பு தன் மனைவி ஹீராவுக்குத் தெரியக் கூடாதென்று எண்ணி, சீயஸ் ஒரு முட்டாள்தனமான சூழ்ச்சி செய்தான். அயோவுடன் அவன் கூடியிருக்கும்போது, தான் தெரியாமலிருக்க அவன் பூமியையே கருப்பு மேகங்களால் மூடி இருட்டாக்கி விட்டான்.

ஹீராவுக்கா இந்த யுக்தி தெரியாது? இரவு நீண்டால் சீயஸ் யாருடைய அந்தப்புரத்திலேயோ தங்கியிருக்கிறன் என்பதுதானே இத்தனை நாளும் அவளுக்குத் தெரிந்துள்ள பொருள்! அவள் உடனே அயோ இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து. அந்தப்புரத்தின் கதவுகளைப் பலமாகத் தட்டினாள்.

சீயசுக்கு ஹீரா வந்திருக்கும் செய்தி புரிந்துவிட்டது. உடன் அவன் அயோவை ஒரு அழகான பசுவாக மாற்றினன். தன் மனைவி வந்ததும், தன் பக்கத்தில் நிற்பது பசுதான் என்றும், சந்தேகப்படுவதற்கு ஒன்றுமில்லை யென்றும், மிக சாகசமாக, சொற்களிலே சர்க்கரைப் பாகை கலந்து கலந்து பேசினன்.

அவனது கற்பனையையும், ஹீரா தனக்குச் சாதகமாக்கிக் கொண்டாள். அப்படியானல் அந்தப் பசுவைத் தன்னிடம் தந்துவிடும்படி தன் கணவனைக் கேட்டுக்கொண்டாள். சீயசால் என்ன செய்யமுடியும்? கேவலம்,ஒரு பசு மாட்டைக் கொடுப்பதற்குக்கூட கடவுளர் உலக ஏகச் சக்கரவர்த்தி சங்கோஜப் படலாமா? மாடு வடிவத்தில் இருக்கும் அயோவை சீயஸ் ஹீராவிடம் கொடுத்துவிட்டான்.

ஹீரா தன்னுடைய அந்தப்புர உரிமையிலே பங்குபெற வந்த அயோவை சும்மா விட்டுவிடுவாளா? பசு வடிவத்திலேயே அந்தப் பூங்கொடியாளைச் சித்திரவதை செய்தாள்! நிர்வாணமாக நடுத்தெருவில் அலையவிட்டாள்! ஆயிரம் கண்ணுடைய ஆர்கஸ் என்னும் பாதுகாவலன்பால் கொடுத்து அவளைத் தப்பவிடாமல் காவல் புரியக் கட்டளையிட்டாள்!

அயோ மாடாகக் கத்தினள். 'அத்தான்! அத்தான்!!' — என்று தொண்டைக் குழிகள் வற்றிப் போகிற அளவுக்கு முழக்கமிட்டாள்!

சீயசுக்குத்தான் காரியம் கை கூடிவிட்டதே! அவன் ஏன் திரும்பிப் பார்க்கிறன்!

✶

## அநாமதேயக் குழந்தை!

கிரேக்க நாட்டிலே அப்பா பெயர் தெரியாத மழலைகளுக்கெல்லாம் புராணத்தின்படி சீயஸ்தான் அந்த ஸ்தானத்தை பூர்த்தி செய்திருக்கிறன். இதோ, அந்தக்கதை!

ஆர்காஸ் நாட்டு அரசன் அக்ரீசியசுக்கு டானே என்று ஒரு செல்வமகள் இருந்தாள். வேந்தனுக்கோ தனக்குப் பின் செங்கோல் சுமக்க ஒரு புத்திரன் இல்லையே என்கிறகுறை,மனதைக் குடைந்து கொண்டேயிருந்தது. அவன் வேண்டாத கடவுள் கிடையாது; கும்பிடாத கோயில் இல்லை! இருந்தும் ஒரு பயனும் கிடைக்கவில்லை. ஒரு நாள் அவன் கனவில் ஒரு அருபம் தோன்றி, அவனுக்கு இனி புத்திரபாக்கியம் கிடையாதென்றும், அவனுடைய அருமை மகள் டானேயுக்கு விரைவில் ஒரு மகன் பிறக்கப் போவதாகவும், அவன்தான் அரசுனுயிருக்கு யமனுக வாய்க்கப்போவதாகவும் அறிவித்து மறைந்து விட்டது.

இதுகேட்ட வேந்தன் சித்தம் சோர்ந்தான். தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ள பெற்ற மகளென்றும்பார்க்காமல் டானேயை பாதாளச் சிறையொன்று தோண்டி, அதிலே காவல் வைத்தான். எந்த ஆண்மகனும் அவளை நெருங்கக் கூடாதென்று கடுமையான உத்தரவு போட்டான்!

பாவம், பெண்ணுகப் பிறந்த குற்றத்திற்காக டானே சிறைவாசம் அனுபவித்தாள். இளமை சாகும்வரை இட்ட கட்டளையை மாற்றமுடியாது என்று கொக்கரித்தான், கோவேந்தன்!

இந்த நேரத்திலே சீயசுக்கு தன் மனைவி ஹீரா கசக்கஆரம்பித்தாள். உடன் பூலோகத்திலுள்ள கன்னிப் பெண்களின் புள்ளிவிபரத்தைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்தான்! ஆண்டாண்டு காலமாக ஆண்களையே பார்க்காமல் வெம்பிப் போயிருக்கும் டானேதான் அவன் கண்களுக்கு காட்சியானள்!

திடீரென்று கடவுளர் கோமகன் காற்று வடிவெடுத்து பாதாளச் சிறைக்குள் நுழைந்தான். பகலையெல்லாம் இரவாக்கிக் கொண்டு பாவையுடன் கட்டிப் புரண்டான்!

அரசன் அக்ரீசியஸ் எதற்குப் பயந்தானே அது நடந்து விட்டது! கருவைக் கொடுத்து விட்ட சீயஸ் கடவுள் மறைந்து விட்டார்! தந்தை பெயர் தெரியாமல் வளர்ந்த குழந்தைதான் பின்னர் வீரன் பெர்சியஸாகத் திகழ்ந்தானும்! அரசன் அக்ரீசியசுக்கு சமாதி கட்டினனும்!

— மாறன் பி. ஏ. (ஹானர்ஸ்)

## பாபுராவின் பதில்

**(?) திருமதி சியாங்கே ஷேக் இப்போது எங்கே இருக்கிறள்?**

*அமெரிக்க வட்டி வேந்தர்களிடம் சியாங்கே ஷேக்கின் சார்பாக அவள் அடகு வைக்கப்பட்டிருக்கிறள்!*

**(?) கசாப்புக் கடைக்காரனுக்கும், டாக்டருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

*கசாப்புக் கடைக்காரன் வெட்டிய சதைத் துண்டுகள் சாப்பாட்டு மேஜைமீது பரப்பப்படுகின்றன. டாக்டர் வெட்டிய சதைக் கோளமோ சுடுகாட்டில் சிதைமீது பரப்பப் படுகிறது!*

**(?) தென்னிந்தியாவில் இப்போது கேட்கப்படும் கேள்வி "நீ பார்ப்பனு? பார்ப்பனரல்லாதவனு?"—என்பதுதான். இது ஏன்?**

*இது மிகவும் பழங்காலத்துக் கேள்வியாயிற்றே! அன்று அதட்டலான குரலில் அந்தக் கேள்வியைப் பார்ப்பனர்கள் கேட்டார்கள். இன்று அதே கேள்விக்கு அவர்களே பதில் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிருர்கள்!*

**(?) மைசூர் சமஸ்தானம் யானைகளுக்குப் பெயர் பெற்றதாயிருக்கிறது. இதை உம்மால் நிரூபிக்கமுடியுமா?**

*மைசூர் ராஜப் பிரமுகர் (மகாராஜா)தான் இதற்கு சாட்சி!*

**(?) உம்முடைய மனைவியுடைய வாழ்க்கைக் குறிக்கோள் என்ன?**

*நான் மறையும்வரை என்னுடைய நிழலாக இருந்து, நான் மறைந்தபிறகு தன்னுடைய நிழலைக் கண்டுபிடித்துக் கொள்வதுதான்!*

**(?) ஏழை மக்களுக்கு மட்டும் ஏன் இருதய விபாதி வருவதில்லை?**

*அவர்களுக்கு வருமான வரி பற்றிய கவலைகள் கிடையாது!*

**(?) உங்கள் ராஜ்யத்தில் கல்வி நிலை எப்படி இருக்கிறது?**

*பாடப் புத்தகங்களின் தரத்தைப் பார்க்காமல், அவைகளின் பருமனைமட்டும் கவனிக்கும் மந்திரி ஒருவர் எங்களுக்குக் கிடைத்திருக்கிறர் நாங்கள் நாளுக்குநாள் படிப்பு வாசனை தெரியாதவர்களாக மாறிக்கொண்டிருக்கிறோம்!*

**(?) லோக் சபாவில் சில சமயம் ஏன் கைதட்டப்படுகிறது?**

*நல்ல சமயத்தில் கை தூக்குவதற்கு, காங்கிரஸ் எம். பிக்களை எழுப்புவதற்காக!*

— 'பிலிமிண்டியா', (ஏப்ரல், 1955)

# பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...



## சூழ்ச்சியின் பலன்

[ செல்வி ]

ன்று தமிழ் ஆசிரியர் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார், லா மாணவர்களும் பதில் ால்லிக் கொண்டிருந்தனர். ாமன் கட்டம் வந்தது.

ஆசிரியர் ''சிலப்பதிகாரத்தின் ிரியர் யார்?'' என்றார். இராமன் ரியாமல் விழித்தான். பக்கத்தி ந்த இராவணன் சிரித்தான், ாமனுக்குக் கோபம் வந்தது. ழ் ஆசிரியர் பக்கத்திலிருப்ப ் யாதும் சொல்லாமல் நின் ா.

டனே தமிழ் ஆசிரியர், 'அடுத் ன்' என்றார். இராவணன் ங்' கென்று எழுந்தான்; 'இளங் ாவடிகள்' என்று கூறினான்.

சபாஷ்! இவன்தான் புத்தி ி. ஐம்பெரும் காப்பியங்களில் ருகிய சிலப்பதிகாரத்தின் ிரியரின் பெயர் தெரியாத நீ தமிழனா?'' என்று இராமனைத் டினார் ஆசிரியர். ஆத்திரங் ண்ட இராமன் இராவணனை ்சம் தீர்க்க கங்கணம் கட்டி ா.

✶

ழக்கம் போல் காலாண்டுத் ்வு நெருங்கிவிட்டது! இராமன் ாகப் படித்தான். இராவண நன்றாகப் படித்திருந்தான். ாமனின் தேர்வு எண் மூன்று; இராவணனின் தேர்வு எண் இரண்டு.

★

பரிட்சை வந்து முடிந்தது. இராமனைவிட, இராவணன் நன்றாகவே எழுதியிருந்தான். இராமனுக்குத் தெரியும், இராவணன் நன்றாக எழுதியிருப்பானென்று. ஆகையால் அவன் மார்க்கைக்குறைத்து, தான் நல்ல பெயர் வாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன், அவன் தன்னுடைய நண்பனாகிய கோபாலனின் வீட்டிற்குச் சென்றான்.

கோபாலனின் தந்தைதான் தமிழ் ஆசிரியர். அவன் போன சமயம், தமிழ் ஆசிரியர் வீட்டிலில்லை. கோபாலன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இராமன் உடனே தமிழ் ஆசிரியர் பேப்பர் வைத்திருக்கும் இடம் சென்று பேப்பரைப் பார்த்தான். முதல் பேப்பரை எடுத்துவிட்டு அடுத்தப் பேப்பரின் மார்க்கை குறைவாகத் திருத்தினான். ஆனந்தத்துடன் வெளியே வந்துவிட்டான்.

✶

அன்று பையன்களிடையே பேப்பர் கொடுக்கும் நாள். பையன்களின் மனதில் பயமும், களிப்பும் தாண்டவமாடிற்று. இராமன் மனதில் மட்டும் மட்டற்ற மகிழ்ச்சி. இராவணனுக்குப் பேப்பர் கொடுத்தனர். அவனுடைய மார்க் அறுபத்திரண்டு என்றதும் இராமனுக்கு பகீர் என்றது. இராமனுக்கு மார்க் இருபத்தினான்குதான். பிறகு பேப்பரை கவனமாய் கவனித்த இராமன், தான் திருத்தியது தன்னுடைய பேப்பரையேதான் என்பதை அவன் அறிந்தான். அவனை அறியாமல் அவன் முகம் மாறுதல் அடைந்தது.

அதைக் கவனித்த தமிழாசிரியர் சிரித்துக் கொண்டே பையனகளை நோக்கி, ''இந்த ஆண்டு வகுப்பிலேயே குறைவான மார்க்கு வாங்கியிருப்பது யார் தெரியுமா? அவன்தான் இராமன். பாவம், அவன் முகத்தைப் பாருங்களேன், சோகம் வடிகிறது. திருடனைப் போல் விழிக்கிறான். காரணம் உங்களுக்கெல்லாம் தெரியாது. சொல்கிறேன் கேளுங்கள். அவன் செய்த திருட்டுத்தனம்தான் அவனது மார்க்கைக் குறைத்துவிட்டது. ஒருநாள் நான் என் வீட்டின் கொல்லைப் புறம் போயிருந்தேன். அப்போது இராமன் வந்தான். என் மேஜையருகில் நெருங்கினான். திரு திருவென்று விழித்துக் கொண்டு விடைத் தாள்களைத் தொட்டான். அவைகளில் முதல் தாளை எடுத்துவிட்டு, மறு தாளாகிய இராவணனது தாளில் ஏதோ திருத்திவிட்டு ஓடிவிட்டான். இதை நான் கொல்லைப் புறத்திலிருந்தே கவனித்து விட்டேன். வந்து பார்த்ததில் திருத்திவிட்டுச்சென்றது இராமனுடைய பேப்பரேதான். காரணம் அவன் முதல் பேப்பரை எடுக்கும்போது, இரண்டாவது பேப்பரும் சேர்ந்து வந்துவிட்டது. இதனால் இராவணனது பேப்பர் தப்பித்துவிட்டது. இதை அறியாத இராமன், மூன்றாவது பேப்பராகிய தன்னுடைய பேப்பரிலேயே மார்க்கைக் குறைவாக திருத்திவிட்டுச் சென்றுவிட்டான் என்று கூறினார். உடனே இராமன் தலைகுனிந்தான்; தன் தவறுக்கு வருந்தினான்.

★

## ஒரே நண்பன்—உயிர் நண்பன்

— செல்வம் —

அன்புள்ளவனே!

நீ என் நண்பன்; உண்மைதான்—அருமைக்கு அருமையானவன்: ஒப்புக்கொள்கிறேன். இரவெல்லாம் கண் விழித்து எனக்காக கடிதம் எழுதுவாய்; அதை எனக்கும் தெரிவிப்பாய்; ான் மகிழ்வேன்—'இதல்லவா நட்பு!' என்று எண்ணிப் பூரிப்பேன். 'நட்பின் சிகரமே' என்று அழைப்பாய்; 'குணக் குன்றே' என்று எழுதுவேன். சோர்வு உற்ற நேரத்தில், 'அயர்ச்சி வேண்டாம், அன்பா' என்று ஆறுதல் சொல்வாய்; தேறுதல் பெறுவேன்.

ஆனால் நண்பனே, இந்த நட்பு என்றும் நீடிக்கும் என்பது என்ன நிச்சயம்? உன்னிடம் அன்பு இருக்கிறது: உண்மையே; அதே சமயம் மனிதப் பண்பில் ஒன்றான ஆணவமும் இருக்கலாம்! நேர்மை உடையவன்; பொய்யல்ல; இருந்தும் உன் மனதில் என்றேனும் மாசு ஏற்படலாம்! நீ என்றும் என்னுடன் இருப்பாய்; ஆனால் சில நேரத்தில் பிரியவும் நேரும்! நீ என் நெஞ்சத்திலிருந்து அழிக்கப்படாத நண்பன்தான்; சரியே; இருந்தும் ஒரு நாள் அந்த நட்பு தூள் தூளாகப் போய் விடும்; ஆமாம் நண்பா; தூள் தூளாகத்தான் போய்விடும்! உன்னையும் என்னையும் துன்பத்தில் ஆழ்த்தும்; புதுக் கவலையைத் தரும்.

ஆனால் உன்னைவிட நேர்மையுள்ள நண்பன் ஒருவன் இருக்கிறான், நண்பா. அதற்காகப் பெருமைப் படுகிறேன் நான். அவன் யார் என்று கேட்கிறாயா? கேள். நான் நடந்தால் அவன் நடப்பான். நான் ஓடினால் என்னைத் தனியே விடமாட்டான்; அவனும் தொடருவான். துயர் கொண்டு வீற்றிருப்பேன்; தூரச் சென்றுவிட மாட்டான்; என் கவலை கண்டு என் நிலையிலேயே அமர்ந்திருப்பான்.

நண்பனே, நம் நட்பைப் பிரிக்க எத்தனையோ குறுக்கீடுகள் வரும். பொறாமையோ—சந்தேகமோ—சூழ்ச்சியோ நம்மைப் பிரிக்கலாம். ஆனால், அந்த நண்பனை என்னை விட்டுப் பிரிக்கவே முடியாது. பிறந்தது முதல் அவன் என்னைப் பிரிந்ததுமில்லை. அப்பப்பா! எங்கள் இடையில் யாராவது குறுக்கிட்டால் அவன் தான் என்ன பாடுபடுவான்! இருள் என்னும் எமன் எங்களைப் பிரிக்க முயற்சிப்பான்; அவனோ ஒளியின் உதவியோடு என்னைக் காண ஓடோடியும் வருவான்.

அவன் நெஞ்சிலே உண்மையில்லை; பொய்யில்லை; எண்ணங்கள் தோன்றவும் இடமில்லை; பாவம், இத்தனைக்கும் அவன் இன்றுவரை பேசியதுமில்லை! நட்பிலே அதிக 'மார்க்'குகள் வாங்கிவிட்ட அவன் யாரென அறிய ஆவல் கொள்கிறாயா? எங்கே சொல்லேன், பார்ப்போம். என்ன யோசிக்கிறாய்? உன்னால் முடியாது. நான் சொல்லுகிறேன். சொல்லட்டுமா? அந்தப் பரிதாபத்திற்குரிய நண்பன்தான்—ஒரே உயிர்த் தோழன்தான்—என் கரிய நிழல்!

அன்புள்ள,
—உடல்

## சிறிய கைகளே

### மீன் பிடிக்க வீண் தொல்லை!

அது ஒரு குட்டை. ஒரே பாசி-சேறு-சகதி! அதிலே நின்று கொண்டிருந்தது ஒரு 'பிறைவானப் பட்டாளம்'. காணக் கண் கூசும்-நிற்கவோ கால்கள் அஞ்சும்-அங்கே அவர்களுக்கு என்ன வேலை? காரணமில்லாமலில்லை. அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் தூண்டில் இருக்கிறது. ஆமாம்; அவர்கள் மீன் பிடிக்கிறார்கள்.

பாவம், அவர்கள் காத்து நின்றார்கள். ஆனால் மீனோ அகப்படவில்லை அந்த சமயத்தில் ஒரு பையன் பேசினான்: '' அடடா! என்ன அசுத்தம்! இதில் நிற்கிறோமே நாம்! தப்பு-பெரும் தப்பு. உடனே இதற்கொரு ஏற்பாடு செய்ய வேண்டும். நண்பர்களே, அதோ பாருங்கள், அங்கே ஒரு பாலம் கட்டுகிறார்களல்லவா, அங்கிருந்து கற்களை கிளப்பி வருவோம்; இங்கு ஒரு கல்லணை கட்டுவோம்; எப்படி என் யோசனை? அதன் மேல் நின்று கொண்டு 'குஷி'யாக மீன்பிடிக்கலாம்!'' என்றான். பேச்சிலிருந்தே புரியவில்லையா? அவன்தான் அந்தப் பட்டாளத்தின் தலைவன்-குறும்புத்தனத்தின் தளபதி!

மற்றவர்கள் மறுப்பார்களா? பக்கத்தில் பாலம் கட்டிக் கொண்டிருந்தவர்கள் வேலையை முடித்தார்கள்; புறப்பட்டார்கள். மறுகணம் நமது சிறிய வீரர்களால் பெரிய பெரிய கற்கள் இடம் மாறின. மீன் பிடிக்க கல்லணைதயாரானது. இருட்டும் வந்தது. கூட்டம் வீடு சென்றது. மறுநாள் காலை வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தது.

பொழுது விடிந்தது. ஆனால் ஆவல் மறைந்தது. காரணம், கற்களுக்குடையவர்களுக்கு விபரம்தெரியாமலாபோகும்? நமது பட்டாளத் தலைவனின் தந்தையிடம் முறையிட்டுவிட்டார்கள். தந்தை கோபித்தார். நல்ல புத்தி சொன்னார். அப்புறமென்ன? பாவம், தன்னந் தனியாக-வியர்வை கொட்ட-உடல் வலி வாட்ட அந்தனை கற்களையும் பழையஇடத்திற்கு கொண்டு சேர்த்தான் அவன்!

குறும்புத் தனமென்றல், 'வெல்ல'மென வரவேற்கும் உங்களுக்கு அந்தத் தோழன் யாரென அறிய ஆவல் தோன்றுகிறதல்லவா! சொல்லுகிறேன்: அவன் தான் தனது பிற்காலத்தில் பெரிய மேதையாய்த் திகழ்ந்து—அரிய உண்மைகள் பல சொல்லிய—பெஞ்சமின் பிராங்களின்!

## பெரிய மனிதர்கள்

# உபயோகமற்றவர்களுக்கு 'உபகாரச் சம்பள'மா?



இரத்தவெறி பிடித்தலையும் சிறுத்தைக்கு ஒரு யானையைத்தான் தீனி போட வேண்டுமென்பதில்லை—சின்னஞ் சிறிய செம்மறியாட்டைத் தூக்கியெறிந்தாலே அதன் பசியடங்கி விடும்!

ஆந்திரத்துச் சிறுத்தை-பதவி தேடி பாய்ந்தோடும் கிழட்டுச் சிங்கம்—யானை வேண்டாம்; பூனையே போதும் என்று கூப்பாடு போடுகிற அளவிற்கு தன் நிலையைத் தாழ்த்திக் கொண்டது.

கனவிலும் நனவிலும் உனைப் பிரியேன்—என்று கடுஞ் சபதமேற்கும் காதலர்களைப் பார்த்திருக்கிறோம். அதைப் போலவே பிரகாசம் பதவிப் பெண்ணைப் பார்த்து மோகவலையை வீசினார்! அவர் வீசிய வலையிலே வாளை மீனல்ல; வரால் குஞ்சுகள் மாட்டியிருக்கின்றன!

அவரைச் சும்மா விட்டால், பிரதமர் பதவி பறிபோன ஆத்திரத்திலே பொதுமக்களைத் தூண்டி விட்டு, சேற்றைவாரி வீசுவாரே என்று சஞ்சலப்பட்டு கோபாலரெட்டியும், சஞ்சிவரெட்டியும் ஒரு நல்ல [?] முடிவுக்கு வந்திருக்கிறார்கள்!

இனிமேல் பிரகாசத்திற்கு மாதந்தோறும் 'பேன்ஷன்' என்கிற பெயரிலே ஒரு ஆயிர ரூபாய்களை வீசியெறியத் தீர்மானித்து விட்டனராம்!

இந்த ஆயிர ரூபாய் மூலம், இனிமேல்தான் அரசியல் களத்திலே குதிக்க மாட்டேன்—பதவி கண்டு பல்லிளிக்க மாட்டேன்-என்று 'ரகசிய ஒப்பந்தம்' செய்யப் போகிறார்கள், ஆந்திரத்து ராஜ தந்திரிகள்!

இதைக்கேள்விப்பட்ட காமராசரும், ஆச்சாரியாருக்கு பென்ஷன் என்று ஒருசில ஆயிரங்களை உதறியெறிந்தாலும் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை!



"என்ன, மாஜி மந்திரிகளுக்கு பென்ஷனா? இது என்னப்பா புது வழக்கம்? பொது வாழ்வில் குதிப்போருக்கு உபகாரச் சம்பளமா? ஜனநாயக நாடுகளில் இப்படி நடப்பதாக சரித்திரமே கிடையாதே!" இப்படிக் கேட்கத் தோன்றுகிறதல்லவா?

கேளுங்கள்; கேளுங்கள். இந்தக் கேடுகெட்டவர்களுக்கு அப்போதாவது புத்தி வருகிறதாவென்று பார்ப்போம்!

## உலகம் எழுதிய...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

கன் தோல்வி கண்டான் என்பது வாக்களிப்பு முடிந்த உடனேயே வெளியானால், அந்தச் செய்தி மறுநாள் தேர்தல் நடக்கும்போது காஷ்மீரத்து காங்கிரஸ் அபேட்சகர்களை மண் கவ்வ வைத்து விடும்! உண்மையிலேயே இந்த நிலைமை ஏற்படாமலிருந்தாலுங்கூட, இதுபோல் நடைபெற்று, ஒரு தொகுதியின் தேர்தல் முடிவுகள் மற்றைய தொகுதிகளையும்தாக்கிவிடுமோ என்று இங்குள்ள தேசிய வீரர்கள் திகைக்கிறார்கள்!

இப்போது தெரிகிறதா நம் நாட்டுத் தேர்தல் விநோதங்கள்?

இங்குதான் ஜனநாயகம் மலர்ந்திருக்கிறதாம்! இவர்கள் தான் சோஷலிச பானையிலே அரசியல் சோறு வடிக்கிறார்களாம்!!

—(மா.)

## கூவாத குயில்......

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

படியே அடுப்பங்கரையை நோக்கிப் போனாள்.

பாலை சூடாக்கிக் கொண்டுவந்து தன் பாலகனுக்கு புகட்டிக் கொண்டே படுக்கையின் மேல் தன் பார்வையைச் செலுத்தினாள். 'இன்று என்ன சீக்கிரமாகவே வந்துவிட்டாரே'...என்று எண்ணிக்கொண்டே எழுந்தாள். தன்னைத் தொட்டு தாலிகட்டிய கணவனின் ஆசை முகத்தை ஒருமுறை பார்த்து விட்டுத் தூங்குவோம் என்று எண்ணி, அருகே சென்று குனிந்து பார்த்தாள். அவன் எட்டிப் பிடித்தான் கையை. முரட்டுக் கை தன்னை பிடித்ததும் முகத்தைப் பார்த்தாள். "அய்யோ! பாவி நீயா..." என்று கதறிக்கொண்டே, கையை உதறிக் கொண்டு ஓட முயற்றாள். அவளின் முந்தானையைப் பிடித்துக்கொண்டான் அவன். தன் மேலாடையை அவிழ்த்துவிட்டுக் கொண்டே, வெளியே ஓடிவந்து கதவை இழுத்து மூடிக்கொண்டாள்.

"இந்திரா, கூச்சல் போடாதே! சத்தம் போட்டால் உன் மகனைக் கொன்றுவிடுவேன். வந்துவிடு—ஒரே ஒரு முறை—உன் மாம்பழக் கன்னத்தில் ஒரே ஒரு முத்தம்—பின் நான் போய்விடுகிறேன்"...

அடப் பாவி! பெண்ணை என்ன படுக்கையறைப் பதுமை என்று எண்ணி விட்டாயா? நான் என்ன தோட்டத்து மலரா-வருகிற வண்டுக்கெல்லாம் உணவளிக்க?..."

"இந்திரா! காலமெல்லாம் காத்திருந்தேன் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி! கிடைத்த வாய்ப்பை நழுவவிட நான் என்ன பைத்தியக்காரனா? இணங்கிவிடு; இல்லையேல் உன் இளஞ் சிட்டை—சிங்கார மொட்டை-கிள்ளி தூள் தூளாக்கி விடுவேன்..." என்று கூறிக்கொண்டே அந்த பசலையை கிள்ள ஆரம்பித்தான் உள்ளமில்லாக் கள்ளன்—இதயமில்லா அரக்கன்...அந்த இளஞ் சிசு 'வீல்' லென்று கத்த ஆரம்பித்தது. கிள்ளினான்—கிள்ளிக் கொண்டேயிருந்தான். வலி தாளாமல் வாய் வலிக்க அலறி துடித்தது, அன்றலர்ந்த மலர். இந்திரா கதறினாள்; சத்தம் போட்டால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினான் அந்தக் காட்டுமிராண்டி. "அய்யோ! கொன்னுடாதே என் செல்வத்தை—குறையாடி விடாதே அதன் வாழ்வை—அணைத்துவிடாதே என் வாழ்வின் ஜோதியை..." உன் கால்களை என் கண்ணீரால் கழுவுகிறேன்...என் கண்மணியை காப்பாற்று...'என்று கதறிய வண்ணம் கதவைத் திறந்தாள். பாய்ந்தது அந்தப் புலி புள்ளிமான்மீது... 'வேண்டாம்' என்று கதறிக் கொண்டே திமிறினாள்...

கதவை அந்த சமயம் நன்றாகத் திறந்துக்கொண்டே உள்ளே நுழைந்தான் பரந்தாமன். மேலாடையில்லாமல் நிற்கும் இந்திரா—சிவந்த கண்களோடு நிற்கும் சந்திரன்—புழுதியிலே புரண்டுகொண்டிருக்கும் புடவை-இவ்வளவும் ஒரு நிமிடத்தில் அவனின் கண்களில் பட்டன. 'அத்தான்' என கதறிக்கொண்டே அவனை நெருங்கினாள் இந்திரா! 'விபச்சாரி! என்னைத் தொடாதே' என்று கூறிக்கொண்டே ஓங்கி அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டான். திரும்பினான். நடந்தான். பின் திரும்பவே இல்லை. அடி பொறுக்காமல் மயங்கி கீழே விழுந்தாள் இந்திரா. சந்திரனின் இதயத்தை சம்மட்டியால் அடிப்பதுபோலிருந்தது. ஆயிரம் ஆயிரம் வேல்கள் தன் இதயத்தை குத்துவதுபோலிருந்தது அவனுக்கு. ஓடினான். எங்கேயோ ஓடியே விட்டான்.

★

அன்றிரவு நடந்த அந்த அதிர்ச்சியிலே இருந்து இந்திரா மீளவே இல்லை. வாழ்வை பறிகொடுத்த அந்தப் பாவியின் வாயும் அடைபட்டுவிட்டது. சிந்தையும் கலங்கி விட்டது.

திடீரென்று தேம்பித் தேம்பி அழுவாள்—புழுபோல தரையில் நெளிவாள்—இதுதான் அவளின் அன்றாட நிகழ்ச்சிகள். காம வெறியால் தூண்டப்பட்ட அற்பனால் அவளின் வாழ்வே பாழடைந்துவிட்டது. இதுதான் நண்பா, அந்த சொகுசு முல்லையின் சோகக் கதை. சூடத்தெரியாதவன் கையிலே சிக்கினாள்; சூதுக்காரன் ஒருவனால் பழிவாங்கப்பட்டாள்; இன்று பேசா மடந்தையாக வாழ்கிறாள்; வாழ்கிறாளா? இல்லை, இல்லை; நடைப்பிணமாக—கசங்கிய மலராக-உடைந்த வீணையாக—கூவாத குயிலாக—உலவுகிறாள்!

★

# ★ மகாபாரதம் - [தொடர் சித்திரம்] - 8 ★



## ஆச்சாரியாரின் அதிர்வேட்டு!

புலி புல்லைச் சாப்பிடுகிறது!

ஓநாய் உண்ணாவிரதம் இருக்கிறது!

கழுகு பிணம் வேண்டாம்; பாதாம் அல்வாதான் வேண்டுமென்கிறது!

பன்றிகளெல்லாம் 'பெப்பர் மிண்ட்' கேட்கின்றன!

—இப்படி அடுக்கடுக்கான அதிசயங்களைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? எந்த 'முற்போக்கு' பத்திரிகைகளிலாவது படித்திருக்கிறீர்களா?

—இப்படி ஏதாவது செய்தி வந்தால்கூட நான் மூக்கின் மேல் விரல் வைக்கமாட்டேன். அதைவிட திகைப்பளிக்கும் செய்தியொன்று என்னைக் கௌவிப் பிடித்துக்கொண்டிருக்கிறது!

ஆமாம்; அக்கிரகாரத்து பாம்புக் குட்டியொன்று நாட்டவரிடம் அன்பு காட்டுகிறது; நம்மைச் சுற்றிச் சுற்றி வருகிறது! இந்தி மொழியை இவ்வளவு சீக்கிரத்தில் ஆட்சி மொழியாக்கக்கூடாது—என்று சொல்லும் ஆச்சாரியாரின் அனல் கக்கும் அறிக்கையைப் படித்தீர்களா? அவர் வணங்கும் தெய்வமாம் அந்த மீசையில்லாத இராமன் தொடுத்த பாணமானது, இராவணனது அங்கங்களையெல்லாம் துளைத்து, அவன் உடம்பில் ஒட்டிக்கொண்டிருக்கும் சீதையைப் பற்றிய நினைவையெல்லாம் கொன்று, பின் அந்த பாவத்தையெல்லாம் பக்கத்திலுள்ள இந்துமகா சமுத்திரத்தில் கழுவிக் கொண்டு, கடைசியாக இராமனது அம்பூராத் தூணிக்குத் திரும்பவும்சென்று உட்கார்ந்து கொண்டதாமே; அதைப் போலவே இந்தி வெறியர் மீது இவர் விட்ட கணை, டெல்லிவரை சென்று இப்போது மாம்பலத்துக்கு மீண்டிருக்கிறதாம்!

முன்பு கட்டாய இந்தியைக் கட்டவிழ்த்துவிட்டவர் — இப்போது; கனியில்லா மரம்போல இந்தியிலே இலக்கியமில்லை; இது இல்லை; அது இல்லை— என்று கூப்பாடு போடுவானேன்?

சில மாதங்களுக்கு முன்புதான் பாரத ரத்ன பட்டம் கொடுத்து வடக்கத்தியர்கள் பன்னீர் தெளித்தார்கள். அப்போதெல்லாம் டெல்லியாரிடம் ஆமையைப்போல் அடங்கிக் கிடந்தவர் அப்போது 'அடங்காப்பிடாரி' யாக மாறுவதேன்?

டெல்லிக்காரர்களைப் பிடித்திருக்கும் 'கெட்டகாலம்'தான் இப்படியெல்லாம் பிடித்தாட்டுகிறது. அதுவும் அவர்களுடைய கௌரவத்தை குறைப்பது போல, 'பட்டம்' வாங்கியவர்களைகப் பார்த்துக் கொட்டமடிக்கிறார்கள்!

சென்ற கிழமைதான் பிர்மாண்டமான பக்ரா நங்கல் அணைக்கட்டை அமைத்துக் கொடுத்ததற்காக பத்மவிபூஷண திஸ்ர வர்க் என்னும் மேற்கு தொடர்ச்சி மலையைப் போல நீண்டதொரு பட்டம் வாங்கிய சர்மா என்பவர் பஞ்சாபிலே கைது செய்யப்பட்டார்.

எதற்காகத் தெரியுமா?

லஞ்சம் வாங்கியதற்காக!

அவமானம்! அவமானம்! அருகதையற்றவர்களுக் கெல்லாம் இந்தஅரசாங்கம் ஆரத்தி எடுக்கிறது!

"பஞ்சாபிலே ஒரு பட்டதாரி சர்மா லஞ்சம் வாங்கி, பட்டத்தின் கௌரவத்தைக் கெடுத்திருக்கிறார்! சென்னையிலோ ஒரு பட்டதாரி ராஜாங்க பாஷையையே அவமானப்படுத்துகிறார் — இப்படியெல்லாம் வடக்கே பேசிக் கொள்கிறார்களாம்!

அணுகுண்டு—அயிட்ரஜன் குண்டு வகையறுவை விட, ஆச்சாரியார் வீசும் இந்த குண்டு அதிர்ச்சியைத் தருகிறதல்லவா?




இதற்கெல்லாம் காரணம் இருக்கிறது.

ஆச்சாரியார் எப்போதுமே, ஆழமில்லாத-வேகமில்லாத ஆறுகப் பார்த்து அதிலே எதிர் நீச்சல் போட்டு நாட்டு மக்களை ஏமாற்றுவதில் கெட்டிக்காரர். அந்த ரகத்தைச் சேர்ந்த 'உடான்ஸ்' வேலைகளில் ஒன்று தான் இதுவும்!

முன்பு அத்தனைக் கதர்க் குல்லாய்களும் இந்தியாவைப் பின்னப் படுத்துவதாக ஜின்னாமீது மண்ணை வாரி இறைத்துக் கொண்டிருந்த போது, 'ஒரு சில வார்த்தைகள்தானே செலவு' — என்று நினைத்துக்கொண்டு ஆச்சாரியார் பாகிஸ்தானை ஆதரிப்பதாக ஒரு அதிர்வேட்டு கிளப்பினார்!

தன்னுடையத் தீர்மானம் அனாதையாகப் போனாலும்கூடத் துணிந்து ஆச்சாரியார் பாகிஸ்தானை ஆதரித்தார்! பத்திரிகைகளெல்லாம் கொட்டை எழுத்துக்களில் அவர் பெயரைப் போட்டு காசு வாங்காமல் 'அட்வர்ட்டைஸ்மெண்ட்' கொடுத்தன!

—இதைப்போல போலி புஸ்வாணங்கள் கிளப்புவதிலே அவருக்கு நிகர் அவரேதான்!

இந்த விசித்திர வேலைக்கு இன்னொன்றுகூட காரணமாக இருக்கலாம்!

சாகப்போகிறபோதுதான் மனிதனுடைய மனசாட்சிக்கு உயிர் கிடைக்கும்; பேச உரிமை கிடைக்கும்!

இரத்தக்கரை படிந்த ஆயுத பலத்தை நம்பியே ஆயுளைக் கடத்திய நெப்போலியன், எல்பா தீவிலே* தன்னுடைய கடைசிமூச்சை காற்றிலே கலந்தபோது அஹிம்சையின் பெருமையைப்பற்றி கிறுக்கித்தள்ளவில்லையா?

அதைப் போலவே கடைசி நேரத்தில் வருங்கால சந்ததியார் தன்னை மன்னித்துவிட வேண்டுமென்பதற்காகவே மாம்பலத்து வேதியர் இப்படி ஒரு வேட்டு கிளப்பியிருக்கிறார்!

பரிதாபத்திற்குரியவர்! பொதுமக்கள் அவ்வளவு சீக்கிரத்திலா சென்ற காலத்தை மறந்துவிடுவார்கள்! ஐயோ; பாவம்!

★

## சிதம்பர ரகசியம்!

உஸ்! ரகசியம்-சப்தம் போடாதீர்கள். சண்டமாருதம் போல நினைத்ததையெல்லாம் கிறுக்கித் தள்ளும் காதறுந்த ஒருவரின் அந்தரங்கத்தையெல்லாம் கொஞ்சம் இழுக்கலாமென நினைக்கிறேன். இதோ; அவருடைய புதிய டெலிபோனோடு உங்களையும் 'கனெக்ட்' செய்து விடுகிறேன்; நீங்களே கேளுங்கள்!

"ஹலோ....செகரட்டரியேட்டா?காமராசர் ஆட்சி வாழ்க...! பச்சைத் தமிழன் ஆட்சிக்கு... பராக்; பராக்!...உம்...வணக்கம் சார்..."

"என்ன சார் இப்படி சத்து நீங்க? நான் காமராசர் அல்ல சார்! அவருடைய ஆபீசிலேயிருந்து பேசறேன்..."

"அயேம் சாரி! அவர் செஞ்ச உதவிக்கு தெருத் தெருவா நின்னு கத்தனும் சார்! இப்ப தினம் ஒரு தடவையாவது 'காமராசர் ஆட்சி வாழ்க!'—ன்னு எங்க எஜமானிடம் பேசமா இருக்கிறதில்லைங்க!"

"அப்ப சரிங்க...வேற விசேஷம் இல்லையே!"

"இருக்குங்க......என் மனைவிக்கு வேலை உயர்வு கொடுத்ததற்காக அவருக்கு என் தேங்ஸ் சொல்லுங்க! சில பசங்ககூட, "காமராசரை எங்க எஜமான் ஆதரிக்கிறாரு; அதை நான் இப்படியெல்லாம் தவறாகப் பயன்படுத்திக்கறேன்......சினிமாக்காரன்களைப் போல புதுக் காரு-கீரு வாங்கியிருக்கேன்னு" சொல்றாங்க. வெளியில்கூட பிரச்சாரம் அதிகமாயிருக்காம். அய்யாகிட்ட சொல்லி அதெல்லாம் பயப்பட வேண்டாம்னு சொல்லுங்க...ஒரு தடவை பேனாவைக் கொஞ்சம் திருப்பிப் பிடிச்சேன்னு பசங்க என் முன்னாடி நிக்கமுடியுமா?...அப்பவும் தேங்ஸ்...நாளைக்கு நேராகவே வந்து அவருக்கு நன்றி சொல்றேன்..."

—இதை அப்படியே நீங்கள் மனதில் போட்டு பூட்டிக் கொள்ள வேண்டும்! வெளியில் யாருக்கும் சொல்லி விடாதீர்கள். இந்த சமாச்சாரம் அவருக்குத் தெரிந்தால் திடீரென்று கல்லக்குடி பக்கம் தன் பேனாவைத் திருப்பிவிடுவார்!

★

## மந்திரியாரின் புதிய வேட்டை!

மதங்கொண்ட யானையின் மத்தகத்தைப் பிளந்தெறிந்த வீரன்—

சீறிவரும் புலிக்குட்டியைப் போர்க் கருவியில்லாமலேயே தரையில் சாய்த்த தீரன்—

இவர்களைச் சங்க இலக்கியத்தில்தானே படித்திருக்கிறீர்கள்! அவர்களில் ஒருவர் இப்போது சென்னை மந்திரி சபையிலும் அங்கம் வகிக்கிறார்!

ஆமாம்; மந்திரி ராம[illegible] படையாச்சியார் வேட்[illegible]டினாராம்!

வழக்கமாக அவர் ஆடும் வேட்டையல்ல; [தவறாக நினைக்க வேண்டாம்; பதவி வேட்டையைத்தான் இப்படிக் குறிப்பிடுகிறேன்!] இந்தத்தடவை அவர் நிஜவேட்டைக்கே சென்றிருக்கிறார்!

சிறுத்தையைக் கொன்றாரா— சிங்கத்தைக் காயப்படுத்தினாரா—என்று கேட்டுவிடாதீர்கள்!

காட்டெருமை ஒன்றை குறி வைத்துச் சுட்டாராம்; அந்த எருமையோமந்திரிக்கு'டிமிக்கி' கொடுத்துவிட்டு ஓடிவிட்டதாம்!

மழை காரணமாக அன்று அந்த எருமை தேடிப் பிடிக்கப் படவில்லையாம் — இப்படி 'மெயில்' பத்திரிகை செய்தி தருகிறது!

அய்யா, ராமசாமி படையாச்சியாரே! நீரும் அப்படித்தான் அந்தக் காட்டு விலங்கைப் போல, மக்கள் சமுதாயம் வைத்த குறியினின்றும் தப்பி காங்கிரஸ் புதரிலே ஒளிந்து கொண்டிருக்கிறீர். இப்போது மழை பெய்கிறது. அடுத்த 'தேர்தல் வெய்யில்' எரிக்கட்டும்! அப்போது களத்திலே உம்மை ஓட்டுத் துப்பாக்கியோடு அவர்கள் சந்திப்பார்கள்!!

★

# 'எழுத்காணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர் :
(●)சௌந்தரபாண்டியன்; அவீசாவெல்ல; சிலோன்.

அமல்ராஜ்; திருச்சி.

(?) பொது வாழ்வு புன்னகை தருவது எப்போது?

பொல்லாங்கு கூறுவோர், புழுதி வாரி வீசுவோர்—இவர்களின் தொகை பெருகும்போது!

சுந்தரம்; தாடிக்கோம்பு.

(?) கடமை என்னும் சொல்லிலே சுயநலம் சேர்ந்தால் அது என்னவாகும்?

"க" —"ம" — வாக மாறி விடும்.

ச. வீரசின்னு; தூத்துக்குடி.

(?) தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொள்ளும் கம்யூனிஸ்டுகள், தூத்துக்குடியில் மேதினத்தன்று பல அரசியல் கட்சிகளும் சங்கங்களும் ஒன்று சேர்ந்து நடத்திய கூட்டத்தில் ஏன் கலந்து கொள்ளவில்லை?

இப்போதெல்லாம் அவர்கள்,மற்றவர்களோடு கூடினால், எங்கே தங்கள் குறை தெரிந்து விடுமோ வென்று திகிலடைந்து போயிருக்கிறார்கள்!

மாரியப்பன்; அருப்புக்கோட்டை.

(?) வாழ்க்கை ஒரு நாவலா? அல்லது சரித்திரமா?

வீரனும், விவேகியும் வாழ்க்கையைச் சரித்திரமாக்கிக் கொள்கிறான்! சோம்பேறிகளோ அதை படித்ததும், குப்பைக் கூடையில் தூக்கி எறியும் நாவலாக்கிக் கொள்கிறார்கள் !

நாதன்; சேத்துப்பட்டு.

(?) ஒரு நல்ல வாலிபனுக்கு வேண்டியது எது? வேண்டாதது எது?

வேண்டியது இலட்சியம்; வேண்டாதது அலட்சியம்!

சி. வெற்றிச்செல்வன்; திருத்துறைப்பூண்டி.

(?) விண்ணுக்கும், மண்ணுக்கும் தொடர்பு உண்டா?

உண்டு; மழை பெய்யும்போது தான் அதைக் கண்ணாலேயே பார்க்க முடியும்!

ம. ஆறுமுகம்; கரூர்.

(?) ஜனநாயக நாட்டில் கட்சிகள் ஏன்?

அவைதான் ஜனநாயகத்தின் கண்கள் !

(●) சௌந்தரபாண்டியன்; அவிசாவெல்ல; சிலோன்.

(?) தென் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் தலைமை நிலையத்தை மாஸ்கோவிலும், கிளையை சீனாவிலும், மூளையை டில்லியிலும் வைத்துவிட்டு, இங்கு என்ன 'பிசினஸ்' செய்கிறார்கள்?

அவர்கள் 'பிசினஸ்' செய்யவில்லை; விளம்பரம்தான் சேகரிக்கிறார்கள்!

சிவசண்முகநாதன்;கோவில்பட்டி

(?) ராமசாமி படையாச்சியார் தேர் ஓட்டினாராமே?

பிறகென்ன ஏரா ஓட்டுவார்!

சுப்ரமணியம்; காரமடை.

(?) ஒரு பெண்ணுக்கு சுதந்தரம் எப்போது ஏற்படுகிறது? கல்யாணத்திற்கு முன்புதானே?

இல்லை. கல்யாணத்துக்குப் பிறகு தான் ஆண்களிடமுள்ள சுதந்தரத்தைப் பெண்கள் பறித்துக் கொள்கிறார்கள்!

கந்தன்; வேம்படிதாளம்.

(?) நேரு யாருக்கு அஞ்சுகிறார்?

அவர் எழுதிய புத்தகங்களுக்கு!

இராமையா; தென்காசி.

(?) ஆச்சாரியார் நம் இனத்தில் பிறந்திருந்தால் எப்படி இருந்திருப்பார்?

வேண்டவே, வேண்டாம்! சிங்கத்தின் வயிற்றில் அந்தச் சிறுநரி பிறக்கவே வேண்டாம்!

பழனிச்சாமி; பசுபதிபாளையம்.

(?) குல்லாய் போடுபவர்கள் யார்?

பதவி வேட்டையாடும் மாணிக்கவேலர்கள்!

அறமழகன்; மருதானை; இலங்கை

(?) பொங்கல் விழாவை இந்துக்கள்தான் கொண்டாடவேண்டுமென்று இங்கு ஒரு பத்திரிகை அறிவித்துள்ளது. இஸ்லாமியத் தமிழர்கள் இந்த விழாவில் கலந்து கொள்ள முடியாதா?

ஏன் முடியாது? பொங்கல் விழா உழவர் திருநாள்; பாட்டாளிகளின் கொண்டாட்டம்! உழைப்பில் நம்பிக்கை வைத்திருக்கும் எந்தமனிதரும் இதில் பங்கேற்கலாம் !

# புதையல்......

✶ 7-ம் பக்கத் தொடர்ச்சி

உருண்டன. என் சிந்தையில் அழியாத சித்திரமாக விளங்கிக்கொண்டிருந்த பரிமளாவை எப்போது சந்திப்போம் என்று ஏங்கிக் கொண்டேயிருந்தேன். கம்பெனி முதலாளி விஷ்ணுமூர்த்தியும் திடீரெனக் காலமானார். கம்பெனியின் முழுப் பொறுப்பும் என் தலையில் விழுந்தது. நடிக நண்பர்களின் ஒத்துழைப்போடு, புதிய நாடகங்கள் தயார் செய்தோம்.

வள்ளித் திருமணத்திற்கு பிரிவுபசாரம் வாசித்து விட்டு, "வாடிடும் ஏழை" என்ற நாடகம் நடித்தோம்—நல்லதங்காள், சாவித்திரி, அரிச்சந்திரா, பிரகலாதா, எல்லாம் சிந்துவராற்றுப் போயின. என் எண்ணங்கள் நாடகமாயின. புதிய புதிய கருத்துக்களை நாடக மூலம் சொன்னோம். எதிர்ப்பு அதிகம்—அது போலவே ஆதரவும் வளர்ந்தது. நினைத்தவைகளை மக்களிடம் சொல்ல முடிகிறதே என்ற மகிழ்ச்சியால் ஆறுதல் பெற்றேன்—ஆயினும் என் ஆருயிர் மோகினியை சந்திக்கத் துடித்தேன்—சந்தித்தேன் — இருவரும் ஒன்றுபட்டோம். பரிமளாவை நான் புரிந்து கொண்டேன். பட்டுக்கோட்டை பள்ளிக்கூடம் —மருங்கப்பள்ளம் கிராமம்— தாண்டவன்—என்கின்ற அடையாளங்களால்!

ஆனால் அனாதையான என்னை அவள் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் காதலரானோம். பெரியவரே! உம்மையும் சந்தித்தோம். உமது புதிரைப் புரிந்து கொள்ளத்தான் போலீஸ் உடையிலே வந்தோம். போலீஸ் உடை எங்கள் நாடகக் கம்பெனி உடையாக்கும்; அவ்வளவுதான்—எங்கே—பெரியவரே! என் கதை முடிந்தது; உமது கதையை ஆரம்பிக்கலாம்" என்றான் துரை. அவன் சொல்லி முடித்ததுதான் தாமதம்; மாயாண்டிக் கிழவர் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார்.

[ வளரும் ]

## திருமணம்

நமது அன்னூர் (கோவை மாவட்டம்) விற்பனையாளர்திரு.ஜெ. வி. வேணுகோபாலனுக்கும், தோழியர் பெட்டம்மாளுக்கும், 16-4-55 அன்று சத்தியமங்கலத்தில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

ஆ. ஞானம்; கரூர்.

(?) ஆவடியில் காங்கிரஸ் மாநாடு கூடிய போது ஆச்சாரியார் பிரதமராயிருந்திருந்தால்...?

இப்போது காமராஜரின் அணு அளவு படத்தை வெளியிட்ட 'கல்கி' அப்போது அவரது படத்தை அட்டையில் வெளியிட்டிருக்கும்!

அப்துல்ஹை; அரகண்டநல்லூர்.

(?) பாரதமாதாவின் வீடு எங்கே இருக்கிறது?

ராஜகட்டத்திலுள்ள காந்தி சமாதியின் பக்கத்தில் தானிருக்கும்!

29-4-55-ந் தேதி முரசொலியில் வெளிவந்த புகைப் படங்கள், அவாள் ஏடுகளுக்கு ஒரு சவாலாகும். காரைக்குடி கம்பன் திருவிழாவுக்கென்று நான்கு வாரம் புகைப்படம்—கபாலீஸ்வரர் திருவிழா, பாரத கலைஞர்கள், ராமநவமி என்று இப்படி வாரந்தோறும் புகைப் படத்தைக் காட்டி மூட நம்பிக்கையை வளர்க்கும்அறிவிலிகளுக்கு, கொள்கை முழக்கம் காட்டி, புத்துணர்வூட்டும் முரசொலியே நீ வளர; வாழ்க!

—கே. எஸ். கண்ணுசாமி, காதக்கோட்டை.

மேவிழா முரசொலியில் பக்கத்துக்குப் பக்கம் அரிய செய்திகளும், கருத்துகளுமாகிய தெள்ளமுதத்தை தெளித்துள்ளீர்கள். பி. சி. கணேசன் உலக விஞ்ஞான வித்தகர் ஐன்ஸ்டீன் மறைவு பற்றி எழுதிய கட்டுரை சிறந்த நறுமணத்தை அளித்துள்ளது. 'ஒரு ரூபாய்' சுவையுள்ள புதுமையா[illegible] கற்பனைச் சித்திரம்— சமுதாயக்கேடுகளை அலசிக் காட்டும் எழுத்துத் திரைப்படம்.

'புதையல்' தொடர்ச்சி, பல உண்மைகளின் அடிப்படையிலே பின்னப்பட்டிருப்பதால் கதைப் போக்காகத் தெரியாமல் நடந்த ஓர் சம்பவத்தைப் படிப்பது போலுள்ளது. துரைக்கு பேராவூரணி மக்கள் ஆதரவளித்தார்கள் என்பது கதையில் குறிப்பிடத் தக்கது. வெள்ளாண்மையில் சிறந்த மக்கள் அன்று மாத்திரமல்லாது, இன்றும் தஞ்சைத் தரணியில் மலிந்துள்ளார்கள் என்ற உண்மை இதனால் உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெளிவாகிறது.

—முரசொலிப் பிரியன், சென்னை-7.

மே தின சிறப்பிதழ், பாட்டாளிகளின் மேல் படிந்துள்ள ரத்தக் கரையைத் துடைக்கும் ஒரு பொறுப்பு வாய்ந்த இதழாக இருந்தது.

—ஆ. மலர்வண்ணன், திருச்சிறுப்பள்ளி.

சென்ற மே தினத்தை சிறப்பித்த முரசத்தின் ஒலியினை படித்து இன்பமுற்றேன். அதன்கண் ஒலித்த "பாண்டுங்" "சீனத்துச் சருகு" இவைகள் நாட்டு விடுதலைக்கு ஒரு விளக்கம். "அகிலத்து விந்தை — அணுவின் தந்தை" என்ற உலக மேதை ஐன்ஸ்டீன் வாழ்க்கை ஓவியம் மக்களை நல்வழிப் படுத்தும் கருத்தோவியம். இம்மாதிரியான தேன் துளிகளை என்றென்றும் முரசத்தின் ஒலியில் கேட்க ஆவல்.

—"நாகேச்வா் சாத்தன்" விருத்தாசலம்.

'ஒரு ரூபாய்' கதை செல்லரித்துப் போன இந்த சமுதாயத்தின் படப்பிடிப்பாக அமைந்திருக்கிறது.

—தா. அ. சந்தானம்,
—கா. வெற்றிவேந்தன், கோவை.

Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-6.